உ
சிவமயம்

ஸ்ரீ விடோபாஸ்வாமிகள்
திவ்ய சரிதம்

மடாதிபதி
சிலஸ்ரீ துரைசாமிசாதுஸ்வாமிகள்
போளூர்

குருபூஜை விழா மலர் வெளியீடு

குரோதி ஐப்பசி, ௧௦
26—10—1964.

...பதி அச்சகம், மூங்கில்மண்டபம், காஞ்சிபுரம்.

உ

சிவமயம்

ஸ்ரீ விடோபா ஸ்வாமிகள் கலியுகம் 5012. சாலி வாகன ஆஸ்தம் 1833. சாதாரண வருஷம் ஐப்பசி மாதம். எ. (ஏழாம் நாள்) ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ண பக்ஷம் ஷஷ்டி திதி திருவாதிரை நக்ஷத்திரம் கூடிய நன்னாளில் இரவு 3 மணிக்குப் பரிபூரணம் அடைந்தார்கள். அப்பொழுது திருவடிப் பூஜை, திருவாராதனை, திருவாசக பாராயணம் எல்லாம் நடந்தன. இக்காலத்தில் இம் மடத்தின் அதிபதியாக இருந்து செவ்விதின் குருபூஜை முதலியன நடத்தி வருகின்ற ஸ்வாமி சீலஸ்ரீ துரைசாமி சாது ஸ்வாமிகள் அவர்கள் திருவுள்ளபடி இஃது அச்சிடுவிக்கப் பெற்று 1964 ஐப்பசி மாதம் ௧௦ ஆவது நாள் திங்கட்கிழமையில் குருபூஜை விழா மலராக வழங்கலாயிற்று.

ஸ்ரீ விடோபா ஸ்வாமிகள் திருவடி வாழ்க.

SRI RAMANASHRAMAM,

TIRUVANNAMALAI, N. A.

Om Sreemathay Ramanayanamaha

Sree Sath Sadhu Duraiswami Swamigal the present head of the Vitobha Mutt, Polur, kindly offers me the pirvilege of writing an introductory note to the Life of Sri. Vitobha. the Sage who adorned Polur for a long time in the later part of the last century He was a Jeevan Mukta held in great esteem and spoken of by Sree. Seshadri Swamigal and Bhagavan Sri. Ramana Maharishigal of Tiruvannámalai. The three important holy places which attracted him were Arunachalam, Chidambaram and Polur the seat of Sampath Gireeswar, where at he chose to stay permanently. Like all the Great Ones, the Lord Parameswara in the form of Sadguru chose to cut off the knots of his bondage in his early teens and he obtained Atma Bhava and supreme knowledge of the Oneness of Existance (Sath chith Ananda) and Vitoba remained in Beatitude (Mouna Bhava) blessing all those that sought his grace and granting them relief from sorrows temporal. Perhaps the blessed ten that followed him were those that obtained his spiritual grace. Innumerable are the miracles that are attributed to him, but his greatness lies not in them but in the light of supreme Truth that He was, is and shall ever be, blessing for all times those that seek that light. Centuries and centuries may pass. but the Supreme Truth of His Existance is eternal and so it is good that a book setting forth the Life of the Great One is published for the benefit of humanity.

It is common knowledge that to those that live in Tiruvannamalai that Sree Seshadri Swami, His contemperory pointed out the Great Light of Vitoba going in Akas at the time of His Vidheha Kaivalya. It is Just Like what happened at the Vidheha Kaivalya of Bhagavan Sree Ramana Maharishi, whose self merged in Arunachala.

The biographers of Sree Vitobha in its present form the two poets A. Tha. Arangasami Naicker and Ma. Su. Kuppuswmai Pillai have done their work most faithfully without distortion of Truth and they deserve the gratitude of the public for the same.

That the first edition of the book was released to the public under the presidency of Vedantha Tharka Bhaskara Ko. Vadivelu Chettiar who was my teacher adds greater interest to the book and the present edition has the further merit of having been revised and edited by Sree Ayya Naicker, Tamil Pandit, Arni.

Above all it is a great thing that Sree Sath Sadhu Duraiswami Swamigal, the present head of the Mutt keep up the great traditions of the mutt by renovating it and by spreading the Light of Vitobha the great Master in all the possible ways. May Lord Arunachala bless him.

My only qualification for writing this note is that I have seen and lived with Bhagavan Sree Ramana Maharishi and nothing more. May His Grace be upon one and all for ever and ever.

T. K. Sundaresa Iyer
Sri Ramanasramam.

உ

திருவம்பலம் உடையார் துணை

அணிந்துரை

காஞ்சிபுரம், தொண்டைமண்டலாதீன குருமகாசந்நிதானம்
ஸ்ரீ மெய்கண்டீசுரர் மடாதிபதி

சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளியது.

பொருளூர் ஸ்ரீ விடோபா சுவாமிகள் திவ்விய சரிதமாகிய இது பாட்டிலும், உரையிலும் அன்பர் வித்துவான் மா. அ. குப்பு சாமிப் பிள்ளையால் இயற்றப்பட்டுள்ளது. ஐம்பத்தைந்து ஆண்டு கட்கு முன்னர் வீடுற்ற சுவாமிகள் இத் தொண்டை நாடெங்கும் போற்ற வாழ்ந்த பெரிய பக்திமான் ஆவார்கள் திரிகால ஞானியாக விளங்கியதால், இந்நாட்டில் அவர்களை அறிந்து வழிபட்ட புண்ணி யர்கள் எண்ணில்லாதவர்கள். இதற்கு முன்னர் இச்சுவாமிகளைப் போற்றிப்பாடிய செய்யுள் நூல் ஒன்று வெளியிடப்பட்டமை இதில் உள்ள முன்னுரையில் அறியப்படும். 1927-இல் வெளிவந்த ஆ மா சிவஞானம் என்னும் பாலகவி பாடிய 'விடோபா மும்மணி மாலை' யும் 1939 இல் அச்சேறிய இரண்டேரிப்பட்டுச் சோதிடர் ம, அருணாசல நயினர் பாடிய "இரட்டைமணிமாலை" யும் உள்ளன பின்னதில் யாம்பாடிய "சாத்துக்கவியும்" மூன்று இருக்கின்றன. இத்திவ்விய சரிதத்தை இப்போது அச்சிடுவித்து வழங்கும் நல்லார் அப்பொருளூரில் உள்ள ஸ்ரீ விடோபா சுவாமி மடாலயத்தின் தலைவர் சீலஸ்ரீ துரைசாமி சாது அவர்கள் அத்தலைமை ஏற்றபின்னர் அம் மடாலயத்தை நன்கு வளர்த்து ஆண்டு தோறும் குரு பூஜையும் சொற்பொழிவுகளும் நிகழ்த்து கின்றவர்கள் செல்வமும் சிறப்பும் பெருக்கி வருபவர்கள். சபாமண் டபமும் திருமடப்பள்ளியும் பிற கட்டடங்களும் தோற்றியவர்கள். ஒரு பெரிய கட்டிடத்தை விலைக்கு வாங்கி அதிற் பள்ளியைவைத்து மக்கள் கல்வி வளர்ச்சியாம் நற்பயனை உறச்செய்திருக்கிறார்கள். அவர்களை எல்லாரும் நல்லார் என்று போற்றிப் புகழ்ந்து ஸ்ரீ விடோ பாஸ்வாமிகள் மடாலயத்திற்கு முற்றும் பொருத்தமானவர்கள் என்று சொல்லக்கேட்டதுண்டு. இந்நூலில் உள்ள செய்யுட்களுள் பாவலர் இருவர் பாடல்கள் உள்ளன. புலவர் மா அ. குப்புசாமி பிள்ளை பாடியவை அவரது புலமையையும் பாவன்மையையும் நன்குகாட்டுகின்றன. இந்நூலைப்பாடியவர் சுவாமிகளின் அருட் பேற்றுக்குரியவர்களாய் மெய்யின்பம் எய்திப் பொய்யுலக வாழ்வை வெறுக்கத்துணிவார்கள். திருவருளால் பக்தர் சரிதம் பரவுக உலகெலாம்.

வாழ்க ஸ்ரீ விடோபா சுவாமிகள்
வாழ்க ஸ்ரீ துரைசாமி சாது அவர்கள்
வாழ்க புலவர் மா. அ. குப்புசாமிப் பிள்ளை முதலிய
அன்பர் எல்லாரும்.

உ

சிவமயம்

முன்னுரை

இரண்டாவது பதிப்பு

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்
பெருவடி வேலுங் கடம்புந் தடம்புய மாறிரண்டும்
மருவடி வான வதனங்க ளாறும் மலர்க்கண்களுங்
குருவடி வாய்வந்தெ னுள்ளங் குளிரக் குதிகொண்டவே.

செந்தமி ழுணர்வென் சிந்தையிற் றெளிவுறத்
தந்தரு ளரங்க சாமியென் னுசான்
அடிதொழு தறைகுவ னவனுரை விடோபா
சரிதத் திடையிடை சாரும்
அரியநற் செய்திக ளாய்ந்துநன் குறவே.

ஸ்ரீ விடோபா சுவாமிகள் சரிதம் இற்றைக்கு நாற்பது ஆண்டுகட்குமுன் உருத்திரோற்காரி வருடம் (1923) வைகாசி மாதத்தில் அடியேனுக்கு ஆசிரியராகிய போளூர் வித்துவான் ஆ. நா. அரங்கசாமி நாயகர் என்பவரால் இயற்றப்பெற்றது; அச்சாகியது. சென்னையில் நிகரற்ற அருந்தமிழ்ப்பெரும் புலவராய்த் திகழ்ந்தவரும், வேதாந்த தர்க்க போதகாசிரியருமான கோ. வடிவேலு செட்டியார் அவர்கள் தலைமையில்' தமிழ்ப்புலவர்களும் பலர் அறிஞர்களும் கூடியிருந்த அவையின்கண் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அச்சிட்டபிரதிகள் அப்போது யாவர்க்கும் வழங்கப் பெற்றன. இச்சரிதம் தோற்ற முரைத்த சரிதை துறவெய்து சரிதை என இரு பகுப்பை யுடையது. துதி உட்பட (53) ஐம்பத்து மூன்று விருத்தப்பாக்களால் சுருக்கமாக யாக்கப்பெற்றது.

• இதன் கண் சுவாமிகளுடைய வியப்புறத்தக்க அரிய பெரிய நிகழ்ச்சிகள் கூறப்பெறவில்லை. அவை மிகவும் இன்றியமையாதவை" என்று யாவரும் கூறிவந்தனர். அவருள் சிலர் சுவாமிகளின் ஜீவிய காலத்து உடன் இருந்து நேரில் கண்டனுபவித்தவர்களாவர். இச்சமயம் சுவாமிகளின் மடாலயத்தில் அரும்பணி இயற்றி வருந் தலைவர் இரண்டாவது பட்டத்தவராகிய சீலஸ்ரீ சாது துரைசாமிசாமி அவர்கள் ஆவார்கள் இப்பெரியார், யாவரும் சொல்லும் அவற்றை

யுணர்ந்து அச்குறை நீக்கவும் தம்மிடமிருந்த பிரதிகளெல்லாம் செலவழிந்து விட்டமையால் இரண்டாவது பதிப்பொன்று வெளியிடவும் கருதிக் காலம் பார்த்திருந்தார்கள்.

ஒருநாள் காலையில் அடியேனை வரப்பணித்தார்கள். சென்று அவர்களைப்பணிந்தேன். அவர்கள் அடியேனை நோக்கி, "சுவாமிகள் சரித்திரத்தை இரண்டாமுறை பதிப்பிக்கக் கருதியிருக்கின்றோம் முன் பதிப்பில் ஸ்ரீ சுவாமிகளுடைய அரிய செய்திகள் பலவிடப்பட்டுள்ளன. அவற்றைப்பாக்களாக எழுதிக்கொடுங்கள், அவற்றைப்புதுப்பதிப்பில் சேர்த்து அச்சிடுவோம்" என்று பணித்தனர். இச்செயலைக் குறித்த விருப்பம் முன்பு எள்ளளவும் இல்லாதவனும் இப்பெரும் பணியைப் புரியும் ஆற்றலில்லாதவனுமாகிய அடியேனை ஒரு பொருளாக எண்ணிச் ,,சுவாமிகள் இதனைசசெய்கஎன்று கட்டளையிட்டதை ஆராய்ந்து நோக்க ஸ்ரீ விடோபா சுவாமிகளது திருவருளேயாகுமென்று தேறி, சுவாமிகள் சொல்லியருளியதை மறுக்காமல் அதற்குஒருவாறு இசைந்தனன் அச்செய்திகளை அறிதற்கு ஆதாரமாகச் சுவாமிகள் ஸ்ரீ ரமணாநுபவம் ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள் சரிதம் முதலிய புத்தகங்களை என்னிடம் அளித்தருளினார்கள்.

அதன்படி அவைகளையாராய்ந்தும், அக்காலத்திலிருந்தசிலர் பெரியார்களைக் கேட்டும் அடியேனது சிற்றறிவிற்கேற்ப இயன்றவரை பாக்களாகச் செய்பத் தொடங்கினேன. ஆசிரியரால் கூறப்பெற்ற இருபகுப்பில் தோற்றமுரைத்த சரிதத்தின் நிகழ்ச்சி, சுவாமிகள் இவ்வூருக்கு வாராதமுன்பு நிகழ்ந்தது. ஆகலின் அதனை விடுத்துத் துறவெய்து சரிதத்திலேயே இடையிடையே அடியேன செய்த பாடல்களை முன்னும் பின்னும் உள்ள பாட்டுக்களின் தொடர்புக்கும் பொருளுக்கும் ஏற்றவாறு தொடர்புறச் சேர்த்துள்ளேன. இதிற் சேர்க்கப்பட்ட பொருள்கள்:—

1. இல்லினைத் துறந்து யாத்திரை செய்தது
2. திருவண்ணாமலை சென்ற செய்தி
3. அடிகளைத் தில்லையிற்கண்டது
4. அடிகள் போளூரையடைந்தது
5. அரசாங்கத் தொழிலோன் அவமதித்தது
6. நல்லவரைச் சிலர் கொல்லச் சூழ்ந்தது
7. திரிசூர் சென்று திரும்பியது
. மழை வெள்ளத்தில் மறைந்திருந்தது
. புரோகிதர் அடைந்து வழிபட்டது
1. சர்க்கஸ் கம்பெனித் தலைவன் சந்தித்தது

11. சிறுமியொருத்தியின் சுரநோய் தீர்த்தது
12. வயிற்றுவலி முதலியவை தீர்த்தது
13. அடிகள் விதேகமுத்தி அடைந்தது
14. திருமடத் திருப்பணி செய்தது

என்பன. இவையே தலைப்பாக அவ்வப் பொருட்கண் முதலில் வைக்கப்பட்டுள்ளன. ஆதலால் இப்பதிப்பில் இச்சரிதம் ஆசிரியா ஆ. தா. அ. அவர்கள் பாடலை யுள்ளிட்டு 133 பாக்களையுடையதாக இயற்றப் பெற்றது.

துறவெய்து சரிதையில் ஆசிரியர் பாடல்கள் இவையென்றறிதற்கு அப்பாடல்களுக்குரிய எண்களோடு ✝ இக்குறி சேர்க்கப்படுள்ளது. இதில் குற்றமிருப்பின் அறிஞர்கள் அவற்றை நீக்கிக் குணத்தை மட்டும் கொள்வார்களாக.

இம்மாபெருஞ் செயலில் அடியேனை ஊக்கிய சீலஸ்ரீ துரைசாமி சாமிகள் அவர்களுக்கு எனது வணக்கமும் நன்றியும் உரியவாகுக இப்பணி முற்றுதற்கு உதவியாயிருந்த பெரியோர்களுக்கும் என் நன்றியுரியதாகுக. அடியேன் எழுதியவற்றுள் அடித்தலை நீக்கியும் திருத்தங்களைக் கொண்டும் அச்சிடுதற்கென்று பல பிரதிகள் எழுதித் தந்த ஆசிரியன் சிரஞ்சீவி கு கணேசனுக்கும் என் ஆசி உரியதாகுக.

இதனை மேற்பார்வையிட்டுப் பிழையின்றிப் பரிசோதித்துத் தந்த என் ஆசிரியர், ஆணி தமிழ்ப் பேராசிரியர் காஞ்சி, தொண்டை மண்டலாதீனப் புலவர், வித்துவான் வே. ஐயர் நாயகரவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி யுரியதாகுக.

இவ்வரும் பணியை என் உள்ளத்திலிருந்து எவ்வித இடையூறுமின்றி முற்றுவித்தருளிய வெற்றிவேற் குமரன் திருவருளை நினைந்து அப்பெருமான் திருவடிகளை என்றும் வணங்கித் துதிப்பேனாக.

போரூர்
1-7-1964

அடியன்,
வித்துவான் மா. அ. குப்புசாமி பிள்ளை

உ

சிவமயம்

ஸ்ரீ விடோபா சுவாமிகள் சரித்திரம்

தோற்றமுரைத்த சரிதை

தவநெறி யறிந்து பவமற நோற்று நவையறு முத்தியை யடைந்த முனிவர்கள் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் புண்ணியத்தையுடைய இப்பாரத நன்னாட்டில், தற்காலத்தில் சிறப்புற்றுத் தலைநகராயுள்ள நகரங்களுள், நாம் வாழும் சென்னை நகரமும் ஒன்றாகும். அந்நகரின்கண் திருவல்லிக்கேணியில் இற்றைக்குச் சுமார் நூறு ஆண்டுகட்கு முன் மன்னர் குலமென்று கூறும் மரபுடைய குலங்களில், தையற்றொழில் செய்யும் அரங்காரியர் மரபில் பதுரே நாகோசிராவ் என்னுமொரு பெரியாரிருந்தார். அவர் கல்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்தவராயும், செல்வமுடையவராயுமிருந்தார். அவருடைய மனைவியார் பெயர் பூசிபாய் என்ப. அவரும் இல்லறத்திற்கேற்றவாறு அருந்ததிக்கு நிகரான கற்பொழுக்கங்களை உடையவராவர். இவர்களுக்குப் பல புதல்வர்களும், ஒரு பெண்ணும் பிறந்தார்கள். அதற்குப்பின் இவர்கள் செய்த புண்ணியத்தின் பயனாக மண்ணவரும் விண்ணவரும் போற்ற நல்ல முகூர்த்தத்தில் கற்றவர் புகழும் எங்கள் கண்ணுறு மணிபோன்றவரான ஸ்ரீ விடோபா சுவாமிகளைக் கடல் மதியினை யீன்றதென்ன ஈன்றனர். மகவினைப் பெற்று மகிழ்ந்த தாய் தந்தையர் வேதவிதி வழாமலும், சாதிமுறை வழாமலும் செய்தற்குரிய நற்சடங்குகளை செய்து மகிழ்ந்தனர். பின்னர் ஒரு நற்றினத்தில் பிள்ளைத்திருநாமமாக. 'தோதா' என்னும் நற்பெயர் சூட்டி நாளும் வளர்த்து வருவாராயினர்.

பள்ளிக்கு அனுப்பிப் பலகலைகள் பயிற்றுவித்தனர். இவருடைய பாலப் பருவம் நீங்கிக் கௌமாரப் பருவத்தை யடைந்தார். அதற்கேற்ற போதமுடையவராய்த் திகழ்ந்த இவரைப் பெற்றோர்கள் தம் குலத்தொழிலில் ஈடுபடுமாறு செய்தனர். அவ்வமயம் இவரது அன்னையார் பரமபதமுற்றனர். தகப்பனும் உரியசுற்றத்தாரும் இவரை ஆதரித்துவந்தனர்.

இவ்வாறிருக்கும் நாளில் இறைவனருளால் இவரைப்பிணித்த பாசம் இவரைவிட்டு நீங்குங் காலம் சமீபித்தது பிறப்பிறப்புக்களும் அவற்றால் உண்டாகுந் துன்பங்களும் இவருள்ளத்தில் இனிது விளங்கலுற்றன. இப்பிறவித் துன்பம் தன்னைவிட்டு நீங்குதற்குரிய குருவை நாடிப் பாரிடை எப்போது வந்து அருள் செய்வான் கொல் என்று பரமனைப் பத்தி செய்து கொண்டிருந்தார் இவர் விருப்பத்திற்கேற்பத் தற்பரமான சிவன் ஒரு நாள் இவரது நினைவின்கண் முன்னர்த் தோன்றினர் இவர் அவரது பாதங்களை நிலத்துற வீழ்ந்து வணங்கி நாயேன் வினையின் நீங்கியுய்யும் விதத்தினை விரித்தருள்செய்க என்று வேண்டினர். கண்ணுதற் பெருமான் அவர்கொண்ட அன்பை மெய்யின் குறிகளாலுணர்ந்தும், அவர் பக்குவத்தை யறிந்தும் "தொண்டனே! நீ விரும்புவது போகமோ, முத்தியோ புகலுதி" என்றார் அன்பர் அதுகேட்டு மெய்ந்நடுங்கிப் "பெருமானே. மண்ணிடை மீண்டும பிறவா வண்ணம் அருள் செய்க" என்றார். சிவபெருமான் உண்மைப்பொருளை விளங்க உணர்த்தினர் அண்ணல் மீண்டும் இறைவன் பாதத்தை வணங்கப் புண்ணிய மூர்த்தி அவர் மேல் அருட்கண் நாட்டி இருக்கும்படி செய்து மேலோர் கருதுகின்ற பிரணவத்தால் நிட்டை கூடுமுறையுங் காட்டி, 'இதன்வழி நிற்பாயாக' என்று கூறி மறைந்தருளினர் புனிதராகிய அடிகள் 'இதுகனவோ நினைவோ" என்று சிலகாலம் மயங்கியிருந்தார்.

பின்பு ஒருவாறு தெளிந்து இஃது ஈசன் செயலாகுமென்று எண்ணி அப்பெருமான் உணர்த்திய நெறியே நிட்டைகூடியிருந்தார் இவ்வணம் நிட்டைகூடிப் பராபரன் அருளுருகொண்டுவந்து தனக்கு அருளசெய்த திறத்தை நினைந்துநினைந்து "அறிவிலேனாகிய யான அப்பரமனுக்கு யாது கைமாறு இயற்றுவேன்" (அவனது திருவடிகளை இடைவிடாமல் நினைவதனறி) என்று நினைந்து இறைவனைத் துதிக்கலானர் எல்லாம் தற்பரன் செயலேயன்றித் தனக்கென வேறு செயலில்லை என்று எண்ணித்தான் சுற்றத்தாருடனை கூடியிருந்தும் பற்றற்று அழகிய வனத்தில் இருப்பவர் போலச் செயலற்று இருந்தார.

இவரது அருள்நெறி நிலையைக் கண்ட சுற்றத்தாரும,பிறரும் இவன் நம்போல் உலகவியாபாரத்தில் ஈடுபடாமல் இருகண்மூடி இருக்கின்றான். நல்ல வாலிபப் பருவம் உற்றிருந்தும் மடவாராசையில்லாத வனுயுமுள்ளான், இவனது மேனி யழகோ சொல்லத்தரமன்று. ஆதலால் இவன் செயல் யாதோ; என்று கருதி ஐயங் கொண்டிருந்தனர். சிலபெரியோர்கள், இவன் நினைத்தது யாதோ அதனையுணராது நாம் இவன் மீது வீணான எண்ணங்கள் கொள்வது தகாது என்று உரைத்துப் போயினர்.

துறவெய்து சரிதை

சுவாமிகட்குப் பத்தொன்பது ஆண்டு நிரம்பியது அப்பருவத்திலேயே பாசம் அவரை விட்டு விலகியது. உலகப் பற்றற்றுத் துறவற நெறியில் நின்றார்.

ஒரு நாள் இவருடைய சிறிய தாயார் இவரை வற்புறுத்தி இவர் தலையில் எண்ணெயிட்டுச் சீக்காய் அரைப்பிட்டுத் தேய்க்கும்போது உதறிக் கொண்டு எழுந்து விரைந்து வெளியிற் புறப்பட்டார். பலர் தடுத்தும் கேளாமல் ஒட்டுப் பற்றில்லாத துறவு பூண்டவடிகள் போனை உடையோடு திவ்விய க்ஷேத்திர யாத்திரை செய்யப் புறப்பட்டார். இவரைப் பின்பற்றிச் சென்றவர்கள் பதின்மர்என்றுகூறுவர்.

பல தலங்கள் தோறும் சென்று பரமனை வணங்கித் துதித்துக் கொண்டு திருவண்ணாமலையையடைந்து, அம்மலையை வணங்கியும், ஆலயத்துட் சென்றும் ஸ்ரீ அருணாசலேஸ்வரரையுந் தரிசித்துப் பின் அவ்வூரிலுள்ள தொரு சத்திரத்தில் தங்கினர். உடன் வந்தவர்கள், சுவாமிகளை நோக்கிச் "சிதம்பரம் போகலாம்" என்று சொல்ல, அடிகள் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தார் அவர்கள் சற்று நேரம் அவர் பதிலை எதிர்பார்த்து ஒன்றும் பதில் கிடைக்கப் பெறாமையால் அப்பதின்மரும், இவரை அவ்விடத்திலேயே விட்டுச் சிதம்பரம் சென்றனர்.

சுவாமிகள் அச்சத்திரத்திலேயே மௌனமாக இருந்தார். மாலைப்போது வரவே சத்திரத்தைக் காவல் புரிபவன் "சுவாமிகளே, பொழுது போயிற்று சத்திரத்தைப் பூட்ட வேண்டும், வெளியே வந்துவிடுங்கள்" என்று சொன்னான். அதையும் கேட்காமல் ஆண்டே மௌனமுற்றிருந்தார். இந்நிலையை யுணர்ந்தவன் அச்சத்திரத்துத் தலைவரிடம் இவர் வெளிவராதிருக்கும் வரலாற்றைச் சாற்றினான். சத்திர அதிகாரியும் அவ்வூரிலிருந்த கலெக்டரையும் அழைத்துக் கொண்டு ஆங்கு வந்து அடிகளைப் பார்த்துப் பலவாறு உசாவினார் இவர் எதற்கும் விடை கூறாது மௌனமாயிருப்பதைக் கண்டனர் அதற்குள் அங்குப் பலர் கூடிவிட்டனர்.

அக்கூட்டத்திலிருந்த பொற்கொல்லனொருவன் சுவாமிகளின் அடியில் விழுந்து வணங்கிச் "சுவாமிகளே" யான் பல நாட்களாக இரசவாதஞ் செய்து வருகிறேன். அது சரியான பயனை அளிக்கவில்லை என்றனன அடிகள் அவனிடமுள்ள செம்பு நாணயம் ஒன்றை வாங்கி, வாயிலிட்டுச் சிறிது நேரம அடக்கி வைத்திருந்து பின்பு உமிழ்ந்தார். அது பொன்னுணயமாக மிளிர்வது கண்டு மகிழ்ச்சி கொண்டு அப்பொற்கொல்லன் அதனை எடுத்துப் போயினன். அதனைக் கணட அடிகள் அவன செயல் மிகவும் இழிவானதென்று ஆங்கு இருந்தார் எல்லாரும் உணரும்படி அவன் பின்னே காறி உமிழ்ந்தார். இதனையுணர்ந்த அதிகாரி, காவற்காரனிடம் "இவரை ஒன்றும் தொந்தரவு செய்யாதே இவரை இப்படியே விட்டுவிடு தீ பூட்டிக்கொண்டு போ பிறகு நானே பார்க்கலாம்" என்று ஆணை யிட்டுப் போயினர். அவனும் அப்படியே பூட்டிவிட்டுப் போயினன்.

மறுநாட் காலை வழக்கம்போல் வந்து சத்திரத்தைத் திறந்து பார்க்க அவ்விடத்தில் சுவாமிகளைக் காணுதவனுயினன் எங்கேயாவது பதுங்கியிருக்கிருரா என்று சுற்றுமுற்றுந் தேடிப் பார்த்தான் காணப் பெறுது உற்ற வியக்கத்தக்க விந்தையைத் தலைவர் பாலறிவித்தான. அவர் அவரை எவ்விதத்திலேனும் கண்டுபிடிக்க வேண்டுமென்று நினைத்து ஏற்றவாறு விசாரிக்க உடன் வந்தவர்கள் பத்துப்பேர் என்பதும், அவர்கள் தில்லை சென்றனர் என்பதும் அறிந்தார். சிதம்பரத்திற்கு ஆட்களையனுப்பிப் பார்த்து வரும்படி கட்டளையிட்டார் அவர்களும் தில்லைக்குச் சென்றனர் அடிகள் சிதம்பரத்தில் அடியார் கூட்டத்தில் ஒருவராக நின்று பொன் மன்றில் நடமிடும் பெருமானைத் தரிசித்துக்கொண்டிருந்ததைக் கண்டார்கள். இச் செய்தியை மீண்டு வந்து சத்திரத் தலைவருக்குச் சொன்னர்கள் எல்லோரும் ஆச்சரியப் பட்டு 'இத்தகைய அடியாரை நம் கண்களால் கண்டது நமது புண்ணியமேயாகு" மென்று வியந்து மகிழ்ந்திருந்தனர்

ஸ்ரீ சுவாமிகள் தில்லையினின்று புறப்பட்டுப் போளூர் வந்து சார்ந்தர். இங்கு வந்து இருபது வருடம் இருந்தார் என்ப. இப்படி யிருக்குங் காலத்தில். இவர் சில நாள் இல்லந்தோறும் சென்று கிடைத்தது எதுவாயிருந்தாலும் "இறைவன் இட்டது இது" என்று மகிழ்ந்து உண்டு வருவாராயினர் கடை வீதியிற் சென்று, கடை தோறும் இரந்து உண்டும் வந்தார். அவ்வேளையில் ஒரு நாள் அடிகள் அவ்வூரிலுள்ள தாலுகா சிரஸ்த்தாதாரர் (Sarishtadar) என்னும் ஒரு அரசாங்க உத்தியோகஸ்தனுடைய வீட்டின் முன்னம் சென்று ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தார். அவ்வுத்தியோகஸ் தன் இவரைப் பார்த்து "நீர் யார்" என்று கேட்க ஒன்றும் பேசா திருத்தலையுணர்ந்து "இவன் யாரோ சோம்பேறி" என்று இவரை

வெளியேற்ற எண்ணி அவரைத் தாக்கும் பொருட்டுத் தன் கைப் பிரம்பை ஓங்கினன் அவ்வளவில் அறிவிற் சிறந்தவளான அவன் மனைவி விரைந்தோடி வந்து "வேண்டா வேண்டா இவர் சிவனடியார் விட்டுவிடுங்கள்" என்று தடுத்துவிட்டாள். அடிகளும் போய்விட்டார் அவன் ஆங்கில மொழியிலேயே ஏதேதோ வைதுகொண்டு ஆபீசுக்குப் போகும் நேரம் அணுகிவிட்டமையால், விரைய உண்டு உடுத்து ஆபீசுக்குப் போயினன்.

போனவன் பிரம்பு கொண்டு ஓச்சிய கை பெரிதும் வீங்கி, வேலை செய்ய முடியாமல் வலி அதிகமாகி உயிர் நீங்கும்படியான நிலையில் தாங்கப்பெருனாய், வேலையை நிறுத்திவிட்டு வண்டியில் ஏறி மீண்டும் வீட்டையடைந்து தன் மனைவி பால் சொல்லி வருந்தினன் அம்மனைவியும் "பெரியவரைத் தாக்க நினைத்த குற்றமே இதற்குக் காரண" மென்று சொல்லி அப்போதே அவனை அழைத்துக்கொண்டு அடிகள் இருக்கும் இடத்திற்கு வந்தாள் இருவரும் சுவாமிகள் திருவடியில் விழுந்து வணங்கினர் அவன் மனைவி சுவாமிகளை நோக்கிப் "பெரியீர்! எளியரேம் தெரியாமற் செய்த குற்றத்தை மன்னித்தருள்க," என்று பல முறை பணிந்து விண்ணப்பித்தாள். அடிகள் புன்முறுவல் கொண்டு தம் கையால் அவன் கையைத் தடவி, 'ஜா' (போ) என்றார். அவ்வருளைப் பெற்று வீட்டுக்கு வருவதற்குள் அவ்வலி குறைந்து வீக்கமும் இறங்கிவிட்டது. இவ்வருட் செயலை நினைந்து அவர்கள் சுவாமிகளை எப்போதும் மதித்து வணங்கி வந்தார்கள்.

சில சமயங்களில் அடிகள் கோவணமின்றியும் நிர்வாணமாகத் திரிதலும் உண்டென்று சொல்லுவர் இவர் இவ்வாறு திரியும்போது இவர் யௌவனமும் அதற்கேற்ற வனப்பும் உடையவராயிருந்தார் அதனால் அவரைக் கண்ட சிலர் அருவருப்பும் ஐயமுங் கொண்டு இவரை வெறுத்தனர். மறு நாளும் அவ்வாறு அவர் வரத் தொடங்கவே இவரை யாவரும் அறியா வண்ணம் இரவினிற் கொன்றுவிட வேண்டுமென்று துணிந்தனர். ஒரு நாள் இரவில் இருளில் இத் தீயவர்கள் அனைவரும் அதற்கேற்ற கொலைக் கருவியுடன் தம் எண்ணத்தை நிறைவேற்றுதற்கு வந்தனர் வந்ததும் அடிகள் அவ்விடத்தில் இல்லாமல் அவர் உருவமானது தலை வேறு கை வேறு கால் வேறாக உறுப்புகள் துணிக்கப்பட்டு வெவ்வேறிடங்களில் விழுந்து கிடப்பதைக் கண்டனர் கண்டதும் அதிசயித்து "ஈதென்ன விந்தை! நமக்கு முன்பே யாரோ இந்த வேலையைச் செய்துவிட்டுப் போயினர் தமது கருத்தையறிந்துதான் செய்தனரோ" என்று நினைத்துத் திரும்பிப் போய்விட்டனர். மறுநாட் காலை அவர்கள் வந்து பார்க்கும்போது அடிகள் தம்முடம்பில் எவ்விதப் பின்னமு

மின்றி முன்னிருந்த விடத்திலேயே வீற்றிருத்தலைக் கண்டு மிகவும் அதிசயித்துப் போயினர். இவரது நிலைமையையும் இவரைக் கொலை செய்யச் சூழ்ந்தவரது தன்மையும் உணர்ந்த சிலர் அறிஞர்கள் அத்தீயவரைக் கடிந்து பேசியது மன்றி, அன்று முதல் அடிகளுக்கு அங்கி (சட்டை) யொன்று தைத்து உடுத்தினர் என்பர்.

மற்றொரு நாளில் அடிகள் போளூரின் பக்கத்துள்ள திரிசூர் என்னும் கிராமத்தை யடைந்து தமக்குற்ற பசிப்பிணியைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு ஒரு வீதியில் நின்றார். இவர் ஒன்றும் வாய் திறந்து பேசாமல் மௌனமாயிருந்ததைக் கண்டு, மிக்க செருக்குடைய ஒருவன் 'இவன் எப்படிப் பேசாதிருக்கிறான் பார்க்கலாம்' என்று சிவக்கக் காய்ந்த ஓர் இரும்புக் கம்பியால்அவர் வாய்ப்புறத்தே புண்படச்சுட்டனன். உடனே வலி பொறுக்கமாட்டாமல் அடிகள் 'விடோபா விடோபா'' என்று பன்முறை அரற்றினர். இவரது அரற்றலைக்' 'கேட்ட அறிஞர்கள் அன்றுமுதல் இவரை விடோபா என்றே அழைக்கலாயினர்

தீயவன் அடிகளைச் சுட்ட புண் ஆறுதற்கு முன்பே அவன் காலரா என்னும் நோயால் இறந்தனன். அவனது சுற்றத்தாரும் அந் நோய் கண்டு வேருடன் அழிந்தனர். இதுவும் ஈசன் செயலாமென்று உன்னிய அடிகள், அவ்வூரை விட்டு மீண்டும் போளூர் வந்து சந்தை கூடுமிடமாகிய சந்தை மேட்டில், ஓரிடத்தில் "இருக்குமிடந் தேடி என்பசிக்கே யன்னம் உருக்கமுடன் கொண்டு வந்தால் உண்பேன்'' என்றுரைத்த பட்டினத்தடிகள் போல நிலையாகத் தங்கி விட்டார்.

அச்சந்தை மேட்டில் மழை பெய்தால் அவ்வூரிலுள்ள நரசிங்கப் பெருமாள் மலையிலிருந்து வரும் வெள்ளமும். சலதாரை நீருடன்சென்று ஏரியில் கலக்கும் வாய்க்கால் ஒன்று உண்டு. சுவாமிகள் அவ்வாய்க்காலிலும் அதன் கீழ்ப்பக்கமுள்ள அவருக்குத் தொண்டு செய்பவருள் ஒருவரான வேலு முதலியார் வீட்டுத் திண்ணையிலுமே அமர்ந்திருப்பது வழக்கம் ஒரு நாள் திடீரென்று பெருமழை பெய்தது. வாய்க்காலில் உட்கார்ந்திருக்கும் சுவாமிகளை அங்குள்ளவர்கள் "சுவாமிகளே! வாய்க்காலில் வெள்ளம் பெருகி வரும். எழுந்து மேலே வாருங்கள்'' எனக் கூறினர். சுவாமிகள் வரவே யில்லை. சிறிது நேரத்திற்கெல்லாம் வெள்ளம் வாய்க்கால் இருகரையும் பெருகி வழிந்தோடியது. விடாது பெய்துகொண்டிருந்த மழையும் சிறிது சிறிதாக நின்றது நின்றும் வெள்ளப் பெருக்கு மிகுந்து கொண்டேயிருந்தது. அடிகள் உருவம் காணப் பெருமையால் அவரை வெள்ளம் அடித்துக் கொண்டுபோய் விட்டதென்று எல்லோரும் கருதினர்.

வெள்ளம் குறையக் குறைய எல்லோரும் அடிகளைத் தேட ஆரம்பித்தனர் ஓரிடத்தில் தலைமட்டும் வெளியே தெரிய உடல் முழுதும் பூமியில் புதைந்து கிடத்தலைக் கண்டு. உயிர் நீங்கப் பெற்ருரென்று துணிந்து வருந்தி மண்ணைக் களைந்து மேலே எடுத்தனர் உடனே சுவாமிகள் கண்ணைத் திறந்து பார்த்துப் புன்னகை புரிந்தனர். அனைவரும் கண்டு அதிசயித்தனர். இவ்வாருக இவர் மகிமை மேலும் மேலும் எங்கணும் பரவலாயிற்று.

உ

அடிகளைப் (புரோகிதர்) ஒருவர் அறிந்து வழிபட்டது

பின்னர் அந்தணர் குலத்தவரும் புரோகிதம் செய்யும் அரிய மரபில் வந்தவரும் வேத சாத்திரங்களைக் கற்றவரும் ஆகிய வெங்கடராய ரென்பார் விடோபாவின் செயல்களிலீடுபட்டு, வந்து அவரது அடிக்கமலங்களில் வீழ்ந்து வணங்கினுர். அடிகளும் அருட் கண்ணுல் நோக்கியருள் புரிந்தனர். அன்று முதல் புரோகிதர் அவர் மருங்கிலிருந்து கொண்டு அரும்பணிகள் புரிந்தொழுகுவாராயினுர்.

இவ்வாருெழுகு நாட்களில் கருப்பமுற்று நிரம்பியிருந்த புரோகிதருடைய மனைவியைத் தாய் வீட்டார் தம்மூருக்கு அழைத்துக் கொண்டு போயினர். சில நாள் கழித்துத் தம் மனைவியின் நிலையை காணும் பொருட்டு அங்குச் செல்ல விரும்பி அவ்விருப்பத்தை அடிகர் பால் செவ்வி நோக்கி அறிவித்தார். செவியேற்ற அடிகளும் சிறிது நேரம் ஒன்றும் உரையாராய் வாளா இருந்தார். மீண்டும் அவர் அடிகளை வேண்டினர் அடிகள் துயரம் கொண்டவர்போல் புரோகிதரைத் தம் கையால் அணைத்து விழிநீர் வார விம்மியழத் தொடங்கினுர் இஃதறிந்த புரோகிதருக்கு ஒன்றுந் தோன்றவில்லை ஆதலின் அடிகளிடம் சொல்லாமலே அவ்விடம் விட்டு நீங்கி

ஆரணியையடைந்தார் அவர் செல்வதற்குள் அவ்வூரில் பிரசவ நோயினால் உயிர் துறந்தனள் என்று கேள்வியுற்று மீளாத் துயரெய்திச் சுற்றத்தாரை நோக்கியழுதார். பிறகு தெளிந்து செயற்குரிய கடமைகளைச் செய்து தம் ஊரையடைந்து பற்றற்ற துறவியின்பால் அடைந்து பணிகளை மேற்கொண்டார்.

பின்பு தம் இல்லறம் நடத்துதற்குத் தக்க துணைவி வேண்டுமென்றெண்ணி ஆராய்ந்து தக்க இடத்தில் ஒரு நங்கையை மணம் பேசி மறுமணம் புரிந்துகொண்டார். திருமணம் செய்துகொண்ட பின்னரும், தேசிகர் பாலுற்ற அன்பு தீராது பணிபுரிந்து ஒழுகுவாராயினர்.

அதன் பின்னர் ஒருநாள் போளூரில் பூனாவினின்று திறமிக்க ஓர் சர்க்கஸ் கம்பெனி வந்தது. அக்கம்பெனிக் குரிய ஆட்கள் பற்பல அரிய மல்லகவித்தைகளும் பலவாருன தேகப்பயிற்சிகளும் காட்டி மகிழ்வுறுத்தி வந்தனர். அதில் சிங்கம், யானை, புலி முதலிய வன விலங்குகளும் குதிரை முதலான நாட்டு மிருகங்களும் தத்தமக்குப் பயிற்றுவிக்கப்பட்ட திறன்களைக் காட்டிப் பலரையும் வியக்கச் செய்தன.

இங்ஙனம் நிகழும் நாட்களில் ஒரு நாள் அக்கம்பெனிக்குத் தலைவன் அடிகளின் குலத்தவனாதலின் அடிகளபால் வந்து உரையாடி அகமகிழ்ந்து அன்றிரவில் நடைபெறும் ஆட்டத்திற்கு வருமாறு கேட்டுக் கொண்டான். அடிகள் "அதனை விரும்பேன்" என்று கூறி மறுத்தார்.

அதனைக் கேட்ட தலைவன் இவரை எப்படியாயினும் கொண்டு போக வேண்டுமென்னுங் கருத்துடையவனாகி இவருக்குப் புதிய அங்கி தைத்துக் கொணர்ந்து உடுத்து, மலர் மாலைகளால் அலங்கரித்து ஊர்வலம் செய்வித்துக் கொண்டு போக விரும்பித், தன்னிடமுள்ள யானையை வருவித்து மண்டியிடச் செய்து அதன் மேல் ஏறும்படி வேண்டினான். அவர் அதற்கும் இசையாது வாளா இருந்தார் அதற்கு மேல் தலைவன் மிக்க உடல் வன்மையும், கல்லுடைத்தல், சங்கிலியறுத்தல் முதலிய தொழில்களிலும் சிங்கம், யானை முதலியவற்றை அடக்கியாளும் திறத்திலும் ஆற்றல் மிக்குடையவன் அடிகள் மீது கொண்ட அன்பு காரணமாக மனத்தையடக்கியாளும் திறத்தினராகிய சுவாமிகளை இலேசாகத் தூக்கி யானை மேல் உட்கார வைக்கலாமென்று எண்ணித் தூக்கத் தொடங்கினன். சுவாமிகளைச் சிறிது அசைக்கவும் அவனால் முடியவில்லை. முக்கி முரண்டித் தூக்கிப் பார்த்தான். தூக்கமுடியவில்லை மூங்கைப்பிடித்துக் கொண்டு திணறிவிட்டான்

தன்னுடன் வந்த ஆற்றல் மிக்க வீமனைப் போன்ற மல்லர்கள் பலரைக் கொண்டு தூக்க முயன்றான். அவர்களும் அவ்வாறே தூக்கிப் பார்த்தனர். முடியாமல் மூச்சுத் திணறி "அப்பப்பா இச்சாமி சாதாரண சாமியன்று இருப்பால் செய்த சாமி" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டனர். தலைவனும் அவர்கள் பின் தலைகுனிந்து போய்விட்டான்

அன்று முதல் அக்குழாத்தினருக்கு வருவாய் அதிகரித்தது குறிப்பிட்ட நாள் கழியலை கம்பெனி வேறிடத்திற்குச் செல்லத் தொடங்கியது கடைசி நாளில் தலைவன் சுவாமிகட்குத் தக்க மரியாதை செய்யும் பொருட்டு மலர்மாலை முதலியவற்றால் அலங்கரித்து வணங்கி நின்றான். பின்புதான் அடிகளுக்கு ஆசிரமம் ஒன்று அமைக்க விரும்பி நூற்றிருபத்தைந்து ரூபாய்களைச் சுவாமிகளின் அருகிருந்த காட்டிலாக்காத் தலைவர் (Forest Ranger) நன்றிங் என்பவரிடம் கொடுத்துவிட்டுப் போனான் அவரும் அதைப் பெற்று அன்பர்களாகிய ஷராப் அப்பாவு செட்டியார் முதலியோரிடம் கொடுத்தார். அவர்களும் மற்றும் சில பெரியோர்களும் அப்பொருளை முதலாகக் கொண்டு மேலும் வேண்டிய பொருள்களைச் சேர்த்து. நாற்கால் மண்டபம் ஒன்று கட்டி முடித்து மேலும் சில திருப்பணிகளும் செய்து முடித்தனர். அடிகள் சில சமயங்களில் அம்மண்டபத்தில் வந்து அமர்வதும் வழக்கம்.

மற்றும் அவ்வூரில் உள்ள தெருவில் ஐந்து அல்லது ஆறு வயதுடைய ஒரு சிறு பெண் சுர நோயால் பீடிக்கப்பட்டு. அதற்குரிய மருந்துகளால் தீராமல் அன்னம் முதலிய ஓர் ஆகாரமுமின்றி. உடல் மெலிந்து, உயிர் நீங்கும் நிலையிலிருந்தாள். அப்பெண்ணின் பெற்றோர், முதலியவர்கள் அச்சிறுமியைத் தூக்கிக்கொண்டுவந்து பரிபூரணமுணர்ந்த ஞானியின் பாதத்தில் கிடத்திப் பணிந்து நின்று பெண்ணின் சுரநோய் தீர்த்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர் சுவாமிகள் ஒன்றும் கூறாமல் அன்று பகல் முழுவதும் மௌனமாகவேயிருந்தனர். பகற்போது கழிந்து இரவு வரவே, நாளைக் காலை வருவோமென்று கருதி அப்பெண்ணை எடுத்துக் கொண்டு போயினர்.

மறுநாட்காலை அப்பெண்ணை எடுத்துக் கொண்டுவந்து சுவாமிகளின் தாளிற் கிடத்தி வேண்டினர். அடிகள் தம்காலால் அப்பெண்ணை மெல்ல உதைத்தனர். அதனைக் கண்ட மற்றவர்கள் உங்கள் பெண்குழந்தையின் நோய் ஒழிந்தது விரைவில் எடுத்துக்கொண்டு போக" என்றனர். அங்ஙனமே அவரும் எடுத்தேகினர் அன்று மறு நாட்காலைக்குள் அச்சுரம் நீங்கப்பெற்றுத் தன் வீட்டு வாயிற்படியில் வந்து மற்றைச் சிறுவர்களோடு விளையாடிக் கொண்டு இருப்பதைக் கண்டனர். அடிகளின் வியக்கத்தக்க செயலையும் அருளையும் அனைவரும் வியந்து பேசிப் போற்றினர்.

அதுமட்டுமன்றி மிகவும் வயிற்று வலியின் கொடுமையால் வருந்திச் சிகிச்சைகளால் தீராமையால், கூற்றினை யுதைத்த சிவபிரானைப்போன்ற இப் பெருந்தவத்தினரையணுகி, அவர் அடிக் கமலங்களில் வீழ்ந்து வணங்கிச் "சுவாமிகளே இக்கூற்று அனைய கொடிய வயிற்றுவலியைத் தீர்த்தருள்க" என்று வேண்டிக்கொண் டனர். கூற்றை யுதைத்தது போல அவர்களையும் தம் காலால் வயிற் றின்கண் உதைக்கவே அவர்வலி அப்போதே நீங்கிற்று. மற்றும் இதுபோன்ற பிறநோய் கொண்டவர்களும் அடிகளின் தரிசன விசே டத்தாலும், அவர் ஸ்ரீ பாதசேவையாலும் பகலவனைக்கண்ட பனி போல் நீங்கி யுய்ந்தனர்.

இப்பெரிய ஞானகுரவர் பெருமை உலகெங்கும் பரவியது. பலர் இவரை நேரேகண்டு தொழவிரும்பி இனிப்பான பல பண்டங்களையும் வாழை முதலிய தீஞ்சுவைக் கனிகளையும் கொண்டுவந்து, அடிகளை உண்ணுமாறு வேண்ட, அவற்றை யுண்டும் மௌன நிலையுற்றிருந் தார் சிலர் அன்பின் மிகுதியால் இவருடைய உண்மை நிலையைச் சோதித் தறிவார்போன்று பொற்காசுகளையும் மற்ற விலையுயர்ந்த பொருள்களை யும் கொண்டுவந்து கொடுத்தனர். அவற்றையும் வாங்கி அவர்கள் முன்பே மண்ணில் வீசி எறிந்து விடுவார். இவ்வண மிருப்ப ஒருநாள்

"மகன் தந்தைக் காற்றும் உதவி யிவன் தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" (குறள் 70)

என்னும் முதுமறைக்கு இலக்காக இவர் இங்கிருத்தலை உணர்ந்த இவர் தந்தையார் வந்து இவரது ஞானநிலையை நன்கறிந்து மைந்தனைப்பார்த்துப் "புனிதனே இங்ஙனமாய நின்னைப்பெற்றது யான முன் செய்த தவப்பேறேயாகும்" என்று சொல்லி உவந்த மனத்தோடு மீண்டு போயினர்.

ஆசையை வென்று பாலர் போலும் உன்மத்தர் போலும் பசா சர் போலும் இருக்கின்ற இவர், பலராலும் பவப்பிணிக்கு மருந்து இவரே என்று புகழ்ந்து துதிக்கப் பெறுவாராயினர். இவருக்கு ஆண்டு தோறும் திருவடிப்பூசையென்னும் திருத்தொண்டை அவ்வூரிலுள் ளார் குற்றமறச் செய்து அவரை வணங்கி வரலாயினர். அதன் பின் மற்றொரு மடமும் கட்டுவித்தனர். அம்மடத்திலும் சிலநாள் சுவாமிகள் வீற்றிருந்தருளினர். இங்ஙனம் இருபதாண்டுகள் கழிந்தன. அதுவரை யும் குற்றமற்ற பெரியோர் யாவராலுங் குறிக்கொணாத குறிக்கோளி லே மனமுடையவராயிருந்தார்.

அதற்குமேல் சாலிவாகன சகாப்தம் 1833 இல் ஆங்கில ஆண்டு சாதாரணவாண்டு ஐப்பசித் திங்கள் ஏழாந் தேதி ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ணபட்சம் ஷஷ்டிதிதி திருவாதிரை நட்சத்திரமுங்கூடிய நன்னாளில் இரவு மணி மூன்றில் தீதற்ற துறவிகட்கெல்லாம் சிங்கம் போன்ற தேசிகராகிய ஸ்ரீ விடோபா சுவாமிகள் விதேகமுத்தி கைவல்யமேவினர்

மறு நாள் தருமகருத்தாவாகிய ஷராப்பு. அப்பாவு செட்டியார், [redacted] அடிகள் சமாதிக்கென்றே தயாரித்து வைக்கப் பெற்ற நிலத்தில் சமாதிக்குரியவகையில் கட்டடம் ஏற்படுத்தி அடிகளுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து மலர் மாலைகளால் அலங்கரித்துப் புஷ்ப விமானத்தில் ஏற்றி ஊர்வலம் செய்வித்துப்பின் சமாதியில் எழுந்தருளச் செய்து சிறந்தமுறையில் அடக்கஞ்செய்து. அதன்மேல் மிருதுலிங்க மமைத்துச் சிலகாலம் பூசித்து வந்தனர். பின்னர் ஆலயம். அர்த்தமண்டபம், மகாமண்டபம், சுற்றுமதில் முதலியவை அமைத்துச் சிவலிங்கப் பிரதிட்டைசெய்து கும்பாபிஷேகம் நடத்தினர்.

புகழ் பெற்ற இப்பெரியார்மீது எல்லோரும் கொண்டபக்தி பரமன் மீதும் கொண்டிலர் என்னும் படியாக வழிபட்டு வணங்க அவர்கள் விரும்பிய திறமெல்லாம் இன்றும் ஈந்தருளும் தகவுடைய ராகித் தற்பரமூர்த்தியாய் எழுந்தருளியுள்ளார்.

தருமகருத்தாவாகிய ஷராப்பு ஸ்ரீ அப்பாவு செட்டியார் அவர்களின் வேண்டுகோட்கிணங்கி கோயிலூர் ஆதீனத்தைச் சேர்ந்த திருவண்ணாமலை, பவளக்குன்று மடம் பட்டத்தைஏற்ற ஸ்ரீலஸ்ரீ வேலாயுத சுவாமிகள் இம்மடாலயத்துக்கு முதற்றலைவராக வந்துபட்டமேற்றார் நித்திய பூசையையும் ஆண்டுதோறும் நிகழ்த்தும் குருபூசையையும் அவரே செய்து வந்தார். பின்பு அவர் சந்நிதிக்கு முன்பாக மடப்பள்ளியொன்று உண்டாக்கியும் வழிபட்டு ஒழுகும் சீடர்களுக்கு வேதாந்த சாத்திரங்களை உபதேசித்தும் வந்தார். சிற்சில ஆண்டுகள் இவ்வாறுகிய பணிகளைச் செய்து வந்த இப்பெரியார் மீண்டும் அருணைக்கண்ணுள்ள பவளக்குன்று மடத்திற்கே செல்லவிரும்பிப் புவனகிரிக்கண் வேதாந்த ஞான சாஸ்திரங்களை ஐதமறக்கற்றுச் சாந்தியடைந்திருந்த "ஸ்ரீலஸ்ரீ துரைசாமி சாது என்பவரிடம் பட்டத்தையளித்துப் போயினர்.

பட்டத்தை ஏற்ற ஸ்ரீலஸ்ரீ துரைசாமி சுவாமிகள் மடத்திற்குரிய அரிய திருப்பணிகளை முன்னினும் அதிகமாகத்திறம் பெறச்செய்து வருவாராயினர். திருமடப்பள்ளியை சிறப்புறத்திருத்தி யமைத்தும்

முன்பாகச் சபா மண்டபம் அமைத்தும் கருப்பக் கிருகத்தைச் சுற்றிச் சுற்று மண்டபம் அமைத்தும், மற்றுஞ்சில விசேட நாட்களில் புலவர்களை யழைத்து அரியபெரிய விரிவுரைகளை நிகழ்த்தச்செய்தும் வருகின்றார். இவ்வாறு வெற்றியின் மிக்க விடோபா சுவாமிகளின் மடாலயப் பணி மேன்மேலும் சிறப்புற்று ஓங்குமாறு செய்யக் கருதியிருக்கும் இப்பெரியார் நீடூழி வாழ்க வென்று உலகம் வாழ்த்தி வாழ்கின்றது. சீர்பெற்ற இஞ்ஞான முனிவரது சரித்திரத்தைப் படிப்போரும் சொல்லுவோரும், கேட்டோரும் இவ்வுலகத்திற் பெறத்தக்க நற்பேறுகளை எல்லாம் ஒருங்கே பெற்று வாழ்வார் என்பது திண்ணம்.

ஸ்ரீ விடோபா சுவாமிகள் சரித்திர வசனம் முற்றிற்று.

ஆரணி தமிழாசிரியர்

புலவர் உயர்திரு. **வே. ஐயர நாயக்கர்**

அவர்கள் அளித்த

சிறப்புப் பாயிரம்

பூமகள் தனக்கெழில் மாமுக மாகிச்
சான்றோர் உடைத்தென ஆன்றோர் போற்றும்
தொண்டை நாட்டில் விண்டொட நிவந்த
பல்குன்றக் கோட்டம் மல்கிய வளம்சேர்
போளூர் தனிற்பன் னாளும் வதிந்த
விடோபா சுவாமியின் வாழ்க்கை மேன்மையைச்
செந்தமிழ்ப் பாவினால் முந்தை யுரைத்தனன்
அரங்க சாமிப் புலவன் அந்நாள்
விடோபா மடத்தின் மெய்ப்பணித் தலைவன்
துறவி யாகும் துரைசாமி சாது
பெரியோன் விடோபா பெருவரலா றெலாம்
யாவரும் உணரப் பாவினால் உரையால்
விளங்க உரைக்கென மிகுமாம் பட்டுறை
கருணிக மரபினன் அருண கிரிதரும்
நுண்ணறி வுடையன் உண்மைப் புலவன்
குப்பு சாமியை இப்பணி புரியப்
பணித்தனன் அவனும் நுனித்தகூர் அறிவினர்
மகிழ் விடோபா புகழும் சரிதையைப்
பைந்தமிழ்ப் பாவிலும் செந்தமிழ் உரையிலும்
விரித்தும் தொகுத்தும் விளங்க உரைத்தனன்.
படிக்குந் தொறும்மிக இனிக்கும் இச்சரிதம்
மக்கள் உள் பத்தி வளத்தை நிறைக்கப்
பாடியும் படித்தும் அன்பினை நாடினோர்
பல்லாண்டு வாழ்கெனப் பரசி வாழ்த்துவமே.

சிவமயம்

பாயிரம்

சென்னை வேதாந்த தர்க்க போதகாசிரியர்

ஸ்ரீமத் கோ. வடிவேலு செட்டியாரவர்களியற்றிய

நேரிசைவெண்பா

வித்துவா னுய விடோபாவி னற்சரிதம்
பந்தியொடு பன்னயங்கள் பான்மையவா—வொத்திலங்க
போளூ ரரங்கசா மிப்புலவன் பொய்யகலக்
கேளாகச் சொற்ருன் கிளர்ந்து.

போளூர் போர்டு மிடில்ஸ்கூல், தமிழ்ப் பண்டிதர், தஞ்சை

ஸ்ரீமான் வி. சாமிநாத பிள்ளையவர்களியற்றிய

அறுசீராசிரிய விருத்தம்

விண்ணுலகுத் தொழுமண்ணு மலைவடபாற் போளூரில்
விளங்கு ஞான
புண்ணிய ஞர் விட்டோபா வெனும்பெரியார் மெய்ச்சரிதம்
புகன்று பாவாற்
பண்ணவர்க்கு மடைவரிதாம் புண்ணியநற் பெரும்பேறு
படைத்திட் டானங்
கண்ணனைய தமிழ்ப்புலவ னரங்கசா மிப்பெயர்கொள்
கவிஞ னம்மா



ஸ்ரீ விடோபா ஸ்வாமிகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ விடோபா சுவாமிகள் சரித்திரம்

பாயிரம்

விநாயகர்

1. திருவளர் மறையின் முடிமிசை யிலகுஞ்
சின்மயப் பொருளிணைப் பணிவோர்
கருவடி களைந்து சிந்தியார் கருதுங்
கருத்தினுக் கூறிழை செய்கை
யொருவனைப் பொருவி லம்பிகை யளித்த
வுன்னருந் தலைவனை விண்ணோர்
கருமுகி னிறத்த கசானனத் தவன்கால்
கைதொழூஉக் கருதிவாழ்த் திடுவாம்

கந்தர்

2. இந்திரன் முதலோர் தம்மை யிடர்புரி யவுணர்ச் செற்றுச்
சிந்தையிற் பரிவு பொங்கச் சிவமுனி யருளால் வந்த
வெந்தொழிற் குறவர் மாதை விதி முறை வேட்ட செவ்வேற்
கந்தவே ளடிக ளென்றன் கருத்தைவிட் டகன்றி டாவே.

கலைமகள்

3 எச்சம யத்தி னோர்க்கு மிறைவியாய்ப் பங்க யத்தோன்
நச்சிய மாதா வென்ற னுவினு மிருந்து வாழுங்
கச்சணி குரும்பை யின்சொற் கலைமகள் பாதப் போதை
யுச்சியி லணிவா ரென்று முயர்கதி யடைந்து வாழ்வார்

(அரும்பதவுரை) 1. கருவடி — (கரு அடி) பிறவியின் வேர் ஊறு—இடையூறு. 2. வேட்ட — விரும்பி மணஞ்செய்து கொண்ட 3. போது என்றது தாமரை மலரை.

விடோபா

4. பண்டைய மறைக ளுடும் பரமனைப் பகவன் றன்னைக்
கண்டருள் பெற்று வையங் கைதொழ வைகி நாளுந்
தொண்டர்தம் பிணியை யாற்றித் தூய்மைசால் போளு
றுற்ற
எண்டிசை புகழ்விடோபா விணையடி முடிமேல் வைப்பாம்

ஆசிரியர்

5. பந்தமும் வீடும் மற்றைப் பற்பல திறமு மோர்ந்து
சிந்தையி லுணரு மாறு சிறுவனை யுணர்த்தி யாண்ட
எந்தையைச் சண்மு கப்பே ரிறைவனைக் குரவன் றன்னை
நிந்தையில் புலிசையாரு நிமலனை நினைந்து வாழ்வாம்.

அவையடக்கம்

6. பற்றறுத் தமலன் பாதம் பற்றிய விடோபா வென்னும்
நற்றவர் சரித மென்னுல் நடத்தலாந் தகைத்தன் றேனும்
உற்றவெ ளுசை யாலீ துரைத்தன னதனுற் குற்றங்
கற்றவர் புகலா ரென்னைக் கருவியாக் கொள்வ ரன்றே.

பாயிரமுற்றிற்று.

தோற்ற முரைத்த சரிதை

—[*]—

7. சிவந்தர வெம்மை யாளுஞ் சிவசுத னருளை நாடுந்
தவநெறி முனிவர் வாழுந் தரத்ததாய் வளங்க ணீடி
நவையறு காட்சித் தாய நானில மாதின் கண்போ
றிவமுறு நகர மொன்று சென்னையென் றுளது மாதோ

(அ-னா) 4. ஆற்றி—தணியச் செய்து 5. குரவன்—ஆசிரியன் புலிசை—திருப்பாதிரிப்புலியூர் 6. பற்று—அவா; அகப்பற்று புறப்பற்றுக்களை 7. திவமுறு-

8. அப்பதி வாழ்வோன் றூய வரசர்தங் குலத்து தித்தோன்
றப்பறு நாகோ சிப்பேர் சார்தரு நல்லோ னென்றும்
ஒப்பரு பத்தி வாய்ந்தோ ஞெண்கலை யாவுங் கற்றேன்
செப்பரு மேம்பா டுற்றேன் செல்வனங் கொருவ னுண்டால்

9. அன்னவன் மனைவி யான வருந்ததி புசிபா யென்பாள்
மன்னிய கருவுற் றெங்கண் மாதவ னருளி னாலே
என்னரு முவப்ப பற்ப லெழிலுடை மைந்தர்ப் பெற்றுள்
பின்னரு மொருத்தி வந்தாள் பெண்ணருங் கலமே போல்
வாள்

10. இல்லற முடையார்க் கென்று மெழின்மக வின்றே னுளுஞ்
சொல்லறம் பலவு மாற்றித் தூயநீர் தோய்ந்திட் டாலும்
எல்லுமிழ் விண்ணுட் டின்ப மெய்துரு தென்பர் மேலோர்
எல்லையின் மகப்பெற் ருருக் கென்குறை யீது நிற்க.

11. உற்றரன் வரத்தான் மீண்டு மொண்டொடி வயிறு
வாய்த்துச்
சொற்றநல் லோரை தன்னிற் ஞெக்குநின் றமரர் வாழ்த்தக்
கற்றவர் புகழு மெங்கள் கண்ணுறு மணிபோல் வானைப்
பெற்றனண் மதியந் தன்னைப் பெருங்கட லீன்ற தென்ன.

12. மகன்வரு தோற்றங் கண்ட மங்கையு மகிழ்ச்சி கூரத்
தகவுறு தந்தை யன்னுன் சாற்றரு மழகு நோக்கிப்
புகழுறு மறைநூற் சொன்ன முறைப்படி புரிய நின்ற
இகழறு சடங்கு முற்று மியற்றின னிருந்த பின்னர்.

13. கற்புடை மடவார் மைந்தர் கலைவலோர் பலருஞ் சூழப்
பொற்புடை மைந்த னுக்குப் புகன்றநன் முகூர்த்தந்
தன்னில்
நற்பெயர் தோதா வென்ன நவின்றனன் வளர்ப்ப வன்னுன்
சிற்பர னருளா னுளுந் திகழுற வளர்ந்திட் டானுல்.

(அ-ரை) 9. என்னரும்-எத்தகையினேரும், 10. எல்-ஒளி, 11. ஓரை-முகூர்த்தம், கண்ணுறுமணி-கண்மணி; என்றது கண்ணிலுள்ள கருவிழியை, 13. தோதா: தோதாராவ். இது பிள்ளைத் திருநாமம், சிற்பரன் - ஞானமயமாகிய கடவுள்.

இளமையும் கல்வியும்

14. பிறைமதி வளர்ச்சி யென்னப் பிறங்கிய தோற்றத் தன்னுன்
கறையறு கலைகண் முற்றுங் கற்றிடப் பள்ளி யேகி
இறைநிக ராசான் சொற்ற விலக்கண முதல கற்ருன்
நிறையெழில் வால ரூப நீங்கிய திவனை விட்டே.

15. பேரறி வுடைய ஞகிப் பெற்றவ ருவப்பத் தங்கள்
சீருறு குலத்தி னுள்ளார் செய்தொழி லாற்று நாளிற்
பாரிடை யிவனை யீன்ருள் பரகதி யடையப் பின்னர்த்
தாரணி புகழத் தந்தை தாங்கின னிவனை நன்றே.

மெய்யுணர் வெய்தியது

16. இம்பரி னிவ்வா றன்ன னிருக்கையி லிருக்கு நாளில்
நம்பியைப் பிணித்த பாசம் நழுவிடத் தக்க காலம்
சம்புவி னருளி னலே சார்ந்திட வதன னன்கு
வெம்பவக் கொடுமை யெல்லாம் விளங்கின விவனு ளத்தே

17. இன்னவா மளற்றிற் பட்டோர்க் கிறப்பெலா முறுமி வற்ருல்
இன்னலே யன்றி யொன்று மின்பமின் றிதனை நீக்கப்
பன்னருங் குரவ னென்று பாரிடை வருவ னென்ன
மன்னிய நினைவி னேடு மாழ்கின னிறைய யுள்ளும்.

18. இன்னணம் பல்கா லீச வெழிற்குரு தன்னை யுன்னிக்
கன்னலும் புளிக்கு மின்சொற் கயிரவ மனைய வாயெம்
அன்னையோர் பாகத் தெந்தி யடியனேன் முறைக்கி ரங்கி
என்னை நீ ஆள்வா யென்ன வேத்தின னிருக்கு நாளில்.

---

14. பிறங்கிய-விளங்கிய, கனவுஅறு-குற்றம்அற்ற, முதல-முதலியநூல்களை. வாலரூபம்-இளம்பருவவடிவம் 15 தாரணி-இவ்வுலகம், 16 நம்பி என்றது ஆடவரிற் சிறந்தவராகிய விடோபா அடிகளை, சம்பு-சிவபெருமான், வெம்பவக் கொடுமை-கொடியபிறவியாலுண்டாருந்தீனம, 17. இன்ன ஆம்-இத்தகைய பிறவியாகிய. அளற்றில்-சேற்றில் என்ன-என்று. உள்ளும்-நினைக்கும்; செய்யுமென்னும் முற்று ஆண்பாலில் வந்தது, 18. ஈச எழில்குரு-பரமசிவனுகிய குரு-உள்ளி-நினைத்து, கன்னலும்-கரும்பஞ்சாறும், கயிரவம், அல்லிமலர், புரிவை-புரிவாய், ஏந்தினன்-முற்றச்சம், அன்னை-உமாதேவி.

பரமன் குருவடிவாகி வந்து அருள் செய்தது

19. தனைநினை தொண்ட ருள்ளார் தற்பர சிவனங் கோர்நாள்
நினைவிடைத் தோன்றி மீண்டு நிலத்துற நின்முன் றன்னை
இனைவறக் கண்ட போதே யெழுந்தடி வணங்கி நாயேன்
வினையிரி வகையெவ் வாறே விரித்தருள் புரிக வென்றான்.

20. கொண்டபே ரன்பு மெய்யிற் குறிகளு முணர்ந்து நாதன்
தொண்டநீ விருப்பே துற்றாய் சொல்லுதி யீது மின்னே
உண்டபோ கத்தோ முத்தி யுயர்விலை வென்றான் மேலை
அண்டரும் பிறருங் காணு வருமறை முடிவாய் நின்றான்.

21. புண்ணிய மூர்த்தி யின்ன புகறலுங் கண்ணீர் வாரத்
துண்ணென மெய்ந்ந டுங்கத் தோன்றலுஞ் சொல்வா னிந்த
மண்ணிடைப் பிறவா வண்ண மாமறை முடிவை யேசர்ந்து
கண்ணுதற் பெரும வாழக் கருதின னென்ற போழ்தில்.

22. உண்மையாம் பொருள்வி ளங்க வுணர்த்தினன் புனிதமூர்த்தி
அண்ணலு மதனை யோர்ந்தா னடியிணை வணங்கிப் பின்னர்
புண்ணிய னருட்க ணூட்டிப் புனிதனை யிருத்தி மேலோர்
கண்ணிய பிரண வத்தாற் காட்டினன் சமாதி தன்னை.

23. அதனையு முணர்ந்தா னைய னதன்பின ரமல மூர்த்தி
இதன்வழி யிருத்தி யென்னு வேகலும் புனித னஞ்சி
இதமுறு மாற்றந் தன்னை யெண்ணிடிற் கனவோ வனறி
மதியுறு நினைவோ வென்னு மயங்கினன் சிறிது காலம.

24. பின்னுறத் தெளிந்தீவ் வெல்லாம் பிஞ்ஞக னருளா மென்னுத்
தன்னுளே யுள்ளி யுன்னித் தளர்ந்துநெஞ் சுருகித் தானுய்
உன்னரும் பரம மூர்த்தி யுணர்த்திய நெறியி னிலைபெற
பன்னருஞ் சமாதி தன்னிற் பராபரன வடிவ மானன்

(அ-ரை) 19. இனைவு அற-துன்பம் நீங்க. இரிவகை-விட்டுநீங்கும் முறை. 20. அண்டரும்-மால் அயன் முதலியோர். 22. அருட்கண் நாட்டி எனக் கொள்க. புனிதனை-விடோபாவடிகளை 23. இதம் உறு — நன்மையடைதற்குக் காரணமான 24 பிஞ்ஞகன்-சிவபிரான்.

25. அடியனேற் கருளும் வண்ண மருட்டிரு மேனி கொண்டு
படிமிசை யன்று வந்த பரமநீ யென்பால் வைத்த
முடிவிலாக் கருணைக் கொன்று மூடனே னறியேன் கைம்மா
றடியிணை தினைவ தல்லா லையனே போற்றி யென்னும்.

26. தற்பரன் செயலே யன்றித் தனக்கெனச் செயலொன் றின்றிப்
பொற்புடை வனத்தி ருப்பான் போலவே சுற்றத்தோடு
நிற்பருஞ் செயல னாகி நின்றனை னின்ற நாளில்
பற்பல மாந்த ரன்னான் பகரரு மாண்பை யுன்னி.

27. என்னிவன் செய்கை நம்போ லிருந்திலன் கண்ணை மூடி
மன்னின னிளமை மிக்கா னென்னினு மடவா ரசை
துன்னிலன் மேனி நோக்கின் சொல்லுமொப்பில்லான் இன்னான்
உன்னிய தறிந்தி லாதே முன்னைப்பதென் னென்னச் செல்வார்

துறவெய்து சரிதை

இல்லினைத்துறந்து யாத்திரை செய்தது

28. அறப்பெருஞ் செல்வி பாகத் தண்ணல்மெய் மடியார்க் கெல்லாம்
பிறப்பிறப் பறுக்க வல்லோன் பெற்றநர் களிற்றின் பாதம்
சிறப்புறத் தொழுவார்க் கென்றுஞ் சிறிதிடையூறு மின்றும்
உறப்பெறுஞ் செல்வ மெல்லாம் உயர்கதி யும்முண் டாமே.

(அ-ரை) 25. கைம்மாறு-திரும்பப் பெறும் உதவி 26.பொற்புடை வனம்-அழகுடைவனம், தவசிகள் விரும்பி யுறையும் இடமாதலின் இங்ஙனம் அடைகொடுத்துச் சிறப்பித்தார். "மின்னொளிர் கான மின்றே போகின்றேன் விடையுங் கொண்டேன்" (கம்பராமாயணம் அயோத்யாகாண்டம்...) 27. ஒன்றிலன்-உள்ளத்தில் கொண்டிலன், 28, 'சிறிதும் இடையூறு இன்றும்' என் உம்மையைப்பிரித்துக் கூட்டுக. செல்வம் எல்லாம் உறப்பெறும் என்க. உயர்கதி-வீடுபேறு.

29. இங்கன நிகழு நாளி ஞென்றெழி யிருபா னாண்டென்
றுங்கநற் பருவத் தையன் றுறவர முறையி னெய்திப்
பங்கமில் துரியங் கூடிப்பரசுக முறலும் பாச
மங்ககன் றிட்ட தாக வனுகபி மான நீத்தான்.

30. பற்றற விருந்த விந்தப் பரிசினை யோரா ணன்கு
சிற்றவை யொருநா ளன்னுன் சிரத்தினி லெண்ண யிட்டே
மற்றைய சிகைக்காய்ச் சாந்தை வைத்துறுத் தித்தேய்க் கும்போ
துற்றவாழ் விதுமித் தையென் றுதறியே யோட லுற்ருன்.

திருவண்ணுமலை சென்ற செய்தி

31. இவன்பினே தொடர்ந்து வந்தோ ரீரைவர் மாந்தர் என்ப
அவருடன் கூடி யையன் அரியரன் றலங்க ணண்ணி
பவமறுந் துய்பு மாறு பரமனைத் தொழுது போற்றிச்
சிவனனல் வடிவாய் நின்ற திருவண்ணு மலையைச் சார்ந்தான்.

32. சிந்தையி னினைக்க முத்தி சேருமப் பதிக்க ணுற்ற
எந்தையைத் தரிசித் துப்பின் னீண்டுமோர் சத்தி ரத்தில்
வந்துதங் கினர்பின் வந்தோர் மகிழ்ந்தனர் உடன் வந்தோர்கள்
அந்நநற் பகலே யந்த வண்ணலை நோக்கி யையா.

33. பதஞ்சலி முனிபு லிக்கால் முனிவரும் பணிந்து போற்ற
இதந்தரு கங்கை சூடு மிறைவனை ந் தொழிலு ணர்த்தும்
பதம்பெயர்ந் தாடு கின்ற பண்பினைக் காண வின்றே
சிதம்பரம் செல்வோ மென்று செப்பின ரன்ன காலை.

(அ-ரை) 29. ஒன்று ஒழி இருபான் ஆண்டு-ஒன்று நீங்கிய இருபது ஆண்டு; எனவே பத்தொன்பது ஆண்டு என்பதாம். துரியம்:நிட்டை, அபிமானம்- பற்று, 30. சிற்றவை-சிறிய தாயார், மித்தை-பொய் 31. ஈரைவர்பதின்மர்-அடிகள் மீது அன்புகொண்ட சுற்றத்தாரும், நண்பரும் 32. சிந்தையில் நினைக்க முத்தி சேரும் அப்பதி என்றது, திருவண்ணுமலை (சோணசைலமாலை செய்யுள் 2) 33 இதந்தரு-பாவத்தைப் போக்கிப் புண்ணியத்தைத் தருகின்ற ஐந்தொழில்- ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், சிருஷ்டி, திதி. சம்ஹாரம், த்ரௌபவம், அநுக்ரகம் என்ப. இதனைப் பஞ்ச கிருத்திய நடனமென்பர்.

34. ஞானவா ரிதிமோ னத்தே நண்ணினன் ஒன்றும் பேசான
ஆனபண் புணர்ந்தோர் காலம் தாழ்த்தலின் விட்ட கன்றார்-?
ஈனமில் சத்தி ரத்தி லிருந்துகாப் பானும் போது
போனதிச் சத்தி ரத்தைப் பூட்டுவ மென்றே யுன்னி

35. வீற்றிருந் தருளும் ஞான வித்தகன் றன்னை நோக்கிச்
சாற்றினன் சத்தி ரத்தைச் சார்த்துவோம் புறம்போ கென்றே
போற்றியே பல்கால் வேண்டிப் போந்தில னேதுஞ் சொல் லான்
ஏற்றமார் தலைவன் பாற்சென் றிசைத்தன னிதனை மன்னோ

36. தலைவனு மரசாங் கத்தின் தணிக்கையார் சூழ வந்திந்
நிலையினைக் கண்ணுற் றந்த நிருமலன் பாலே நண்ணி
இலைவெறுத் துற்றிர் நீவி ரெழுந்தருள் கென்று பல்கால்
சொலவதற் கொன்றுஞ் சொல்லான் தூயவன் பண்பை யோர்ந்தார்.

37. அன்னபோ தவனைக் காண வாங்குவந் தோர்கள் தம்முன்
பொன்வினை செய்யும் கொல்லன் புண்ணியன் தாளைப் போற்றித்
தன்குறை சாற்ற வெண்ணித் தான்செயு மிரத வாத
கன்மமுற் றிலதென் செய்வேன் கருணைசெய் தருள்க வென்றான்.

38. கேட்டனன் கேடி லாதான் கிளந்தவன் றன்பாற் செப்புக்
கோட்டமில் நாண யத்தைக் கொண்டுதன் வாய டக்கி
மீட்டதை யுமிழ வஃதோர் விலையில்பொற் காசா யிற்றால்
வாட்டமில் லாப்பொற் கொல்லனை மகிழ்ந்ததைக் கொண்டு போனான்.

39. அவனொ கொளு மற்ப மான ஆநந்தம் கண்டி கழ்ந்தே
தவமுடை யோனும் காறி யுமிழ்ந்தனன் தகவி லானை.
எவருமிவ் வற்பு தங்கண் டினையிலாப் பரம ஞானி
இவரென மதித்துப் போனா ரினியவத் தலைவன் றானும்.

(அ-ரை) 34. ஞானவாரிதி - ஞானக்கடலாகிய விடோபாவடிகள், 35. புறம் – வெளியில், 36. அரசாங்கத்தின் தணிக்கையார் - கலெக்டர் இலை–இல்லை, இடைக்குறை இல் என்றது ஆகு பெயரான் இல்வாழ்க்கையையுணர்த்திற்று. 37. இரதவாதகன்மம் என்றது, இரும்பு, செம்பு முதலியவற்றைப் பொன்னாக்கும் உபாயம். 38.கேடிலா- தான் -பிறவித்துன்பமில்லாதவன், கோட்டம் இல்-மாறுபாடு இல்லாத 39. தகவு இலான்–ஞான நெறியை நாடும் பண்பில்லாத அப்பொற் கொல்லன். 39 குணகம்.

40. காவல்செய் பவனை நோக்கிக் கண்ணுறு மிவரை யீண்டே
பேணவிட் டினிது பூட்டி வீடுசெல் கென்று சொற்றான்
ஏவலின் படியே அந்த இரவினிற் செய்து போனான்
யாவரு மிறும்பூ தெய்த விவன்செயல் யாதோ வென்னில்

41. மற்றைநாட் காலை வந்து வாயிலைத் திறந்தா னங்கு
நற்றவன் றன்னைக் காணான் நண்ணுமவ் விடத்தி லெங்குஞ்
சுற்றினன் தேடிக் காணான் தொழுதுதன் தலைவன் பாலே
சொற்றனன் அவனும் நெஞ்சிற் றுளக்கமும் வியப்பு முற்றான்

அடிகளைத் தில்லையிற் கண்டது

42. உடன்வந்தார் திரலை சென்ற உறுதியைத் தலைவ ேனார்ந்தே
மடனனி யிகந்த ஞான வள்ளலைக் காண வெண்ணித்
திடனுறத் தேடு வாரைத் தில்லையில் விடுப்ப நாதன்
நடம்புரி சிதம்ப ரத்தை நண்ணினர் காண வண்ணல்

43. அன்பரி டையே மன்னு மதிசயங் கண்ணிற் கண்டார்
துன்பம தீரியத் தொல்லோன் துணையடி தொழுது மீண்டும்
மன்பதி தமரைச் சார்ந்து வருத்தனர் கண்டசெய்தி
இன்புறத் தலைவன் பாற்சென் றெல்லையில் மகிழ்வுற் றூரால்.

44. எனையரு மன்ன ரானார் ஏத்துறும் உண்மை ஞானி
தனையுடன் வந்தோ ராங்குத் தனித்துற விட்ட கன்றூர்
வினையறு வார்கள் போற்றும் விமலனார் நடங்கண் டின்புற்
றினைவறு முளத்த ராகி யிருந்தனா ரென்ப மன்னோ

(அ-ரை) 40. இறும்பூது - ஆச்சரியம் 41. துளக்கம் - நடுக்கம் 42. மடன்-மடம் அறிாமை, இச்செய்யுளின் இறுதியில் உள்ள 'அண்ணல்' என்னும் சொல் அடுத்த செய்யுளிற் சென்று பொருள் முடிதலால், இது குளகம், 44. எனையரும்-ஏனையோரும், இனைவு-பிற வித்துன்பம்.

அடிகள் போளூரை யடைந்தது

45. பின்னொரு தினத்தி லையன் போரி வுடையார் போற்றத்
துன்னுகோ வணத்த னாகித் தொலைவிலாப் பதிகள் சுற்றிப்
பன்னருஞ் * சீர்சால் போளூர்ப் பதியினை யெய்தி யங்கண்
என்றனை யாள்வான் வேண்டி யிருந்தவ வடிவாய் நின்றான்.

*பொருளூர் என்று வழங்கியது பின் போளூர் எனமருவிற்று இதைச் 'சம்பந்கிரி' என்னும் வடமொழிப் பெயர்ப்பால் உணரலாம். இவ்வுண்மையை காஞ்சி நகரம் தொண்டை மண்டலாதீன குரு மகா சந்நிதானம் சிவஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய ஸ்வாமிகள் தெரிவித்தருளியது.

46. பெரியனவ் வூரிற் பன்னாட் பிறங்கினன் றிரியுங் காலை
யெரிபசி யகற்ற வேண்டி யில்லந்தோ றிரந்து சென்றி
தரியதோ ரமுத மென்று மற்பகலை மென்றும் பாரான்
திரிபுரமெரித்தோ னிட்ட செயலெனக் கையேற் றுண்பான்

அரசாங்கத் தொழிலோன் அவமதித்தது

வேறு

47. அப்பதியின் கண்ணொருநர ளரும்பசிகொண் டேயையன்
ஒப்பிலர சாங்கவினை யுற்றவன்றன் மனைவாயிற்
செப்புதலில் லாதிருந்தான் றிறமறியாத் தீயவனும்
தப்பவன்றன் செயலென்று தப்புதற்கே தானினைந்தான்

48. பிரம்பதுகொண் டேயவனும் பெரியவனைத் தாக்கக்கை
வரம்புறவோங் குங்காலை வர்கண்ணன் மனையாளும்
பரம்பரன்றன் னடியார்க்குப் பழுதுறுத்த றீதென்றே
நிரம்பியவன் பாற்றடுத்தா ணேரிழைசொற் குடன்படுவான்.

49 ஆங்கிலமா மொழியாலே ஆசுறவை தாங்கிலத்திற்
பாங்குறநன் குண்டுடுத்துப் பணிபுரியு முழைச் சென்றான்
வீங்கியதா லவன்கையும் வினைசெய்ய வியலாமல்
நீங்கலிலா நோயுறவே நெடிதாற்றி நைந்தனனே.

(அ-ரை) 45. பதிகள்-ஊர்கள், 46. பிறங்கினன் திரியுங்காலை-யாவரும் உணரும்படி சாதாரணமான இரவலன் போல் திரிந்துவருங் காலை, 47. அரசாங்க வினையுற்றவன்-அரசாங்க உத்தியோகம், செய்பவன் இவனைச் சிரஸ்தாதார் (Surishtadar) என்ப, அவன் செயல்தப்புஎன்று; தப்பு-குற்றம், தப்புதற்கு-அடிப்பதற்கு, 48.பழுது றுத்தல்தீது என்க. உடன்படுவான்-வினையெச்சம். 49. ஆங்கிலம் ஆம்மொழியிலே எனப்பிரிக்க, ஆங்கு இலத்தில்-தனது வீட்டில், இலம்இல்லம் என்றதன் தொகுத்தல், பணிபுரியும் உழை-வேலை செய்யும் இடம்; (Office).

50. தன்னுயிர்போ மெனநினைந்து சகடத்தில் தன்மனைக்கே
இன்னலுடன் வந்தனன்ற னில்லாளுக் குற்றவெலாம்
சொன்னதுமத் தூயவடான் றுகளில்லான் றனைத்தாக்க
உன்னியகுற் றத்தாலே யுற்றதிதா மென்றுரைத்தே.

51. எரியினுற் சுடப்படினு முய்வார்கள் இனியுய்யார்
பெரியவரைப் பிழைத்தொழுகும் பெற்றியின ரென்பவென
அரிவையுரை செய்தவனை யறிந்தவன்க ணழைத்தேகி
விரிமலர்த்தாள் வீழ்ந்துகரம் குவித்திறைஞ்சி வேண்டு
வளால்

52. சிறியவரே மாணவத்தாற் செய்தபிழை பொறுத்தியென
வறியவர்போ லேங்கி நின்ற வருத்தங்கண் டேயிரங்கி
நறியமலர்த் திருக்கரத்தா னலியுமவன் கரந்தடவி
அறிவருந்தன் மொழியாலே யண்ணலும்போ வென்றுரைத்
தான்.

53. அப்பொழுதே கதிர்கண்ட வாரிருள்போ லகன்றெழிந்த
தொப்பரியான் பொறுத்தருளு மொருசெயலைக் குறித்
திறைஞ்சி
வெப்பழிந்த வுளத்தினராய் வியன்மனைசென் றின்புற்றுங்
கெப்பொழுது மவன்றிறமே யெண்ணிவழுத் திட்டனரே.

வேறு

54. * அங்கண நீரென் றுலு மள்ளியுண் டகங்கு ளிர்ந்து
பொங்கர வணிந்தோன் சொற்ற பொருளினை யுன்ன லன்றி
மங்கலி லமிநென் றுலு மற்றெரு மனையிற் சாரான்
பங்கமில் குணத்தா னிந்தப் பரிசினி லிருந்தா னிப்பால்

(அ-ரை) 50. சகடு-வண்டி. துகள் இல்லான்-முக்குற்றமில்லாத அடிகளை. குற்றம் இல்லாதவனைத் தாக்க நினைந்தான். என்னும் நயந்தோன்றும் குளகம். 51, "எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார் பெரியார்ப் பிழைத்தொழுகுவார்" (திருக்குறள் 896 52. ஆணவத்தால்-கர்வத்தால், போ என்பதற்கு ஜா என்று தம் மொழியாகிய மராட்டிய மொழியால் கூறினர் என்பது அறிவருந்தம் மொழியென்றது ஏனையோரால் பொருளுணர்ந்து கொள்ளற்கு அருமையான மொழி என்பதாம். 53. வெப்பு-வருத்தம், 54. அங்கண நீர்-சலதாரை நீர்.

நல்லவரைச் சிலர் கொல்லச் சூழ்ந்தது

55. துன்னு கோவண மின்றியுஞ் சில்பக றுகவூர்
மன்னு மாதவன் மறுகினில் வருவது தெரிந்தோர்
அன்ன வன்னிலை யறிந்தில ரவனிள மையினால்
பொன்னை நேர்வடி வால்ஐயம் பொருந்திய தகலார்.

56. அன்று போய்மறு நாளினு மவ்வண மடுத்தே
சென்ற னன்றனைக் கண்டனர் சினந்தனர் மேன்மேல்
துன்று தீயவர் கரவினிற் றென்மலப் பகையைக்
கொன்றவறன்னைக் கொலை செய்யச் சூழ்ந்தனர் கொடி
யோர்

57. நெஞ்சி லுன்னிய தனை நிறை வேற்றுவான் நேர்ந்தே
துஞ்சு நள்ளிருட் செறிந்தபா ளுனிற் சூழும்
நஞ்சி போன்றவர் நாந்தகக் கையின ராகி
அஞ்சும் வென்றவ னிருக்கையை நாடியாங் கடைந்தார்

58. வந்து காணுறும் போதவர் மனந்திகைப் புறவே
பந்த மற்றவ னுடலனு பலதுணிப் பட்டே
சிந்த ரத்தமு டன்ரசிங் கால்கைவே ருகி
முந்து றக்கிடந் ததுதனைக் கண்டனர் மூர்க்கர்

59. தங்க ருத்தினை யுணர்ந்துகொ ளுமிது செயுமுன்
இங்கி யாவரோ விச்செயல் புரிந்தன ரென்று
தங்கண் பேருவ கையொடு தம்முறைச் சார்ந்தார்
கங்கு லுங்கழிந் ததுகதி ரவன்வர வன்றே

(அ-ரை) 55. துன்னு-நெருங்கிய, மறுகினில்-தெருவில், 56 கரவினில் கொலை செய்யச் சூழ்ந்தனர் என்க. 57. உன்னிய அதை-நினைத்த அதனை; உன்னியவதை-நினைத்தவதை செய்தலாகிய கொலையை. எனவும் ஆம், பானுள்-பாதியிரவு, அஞ்சுவென்றவன்-ஐம்புலன்களையும் வென்றவராகிய அடிகளை, தொகைக் குறிப்பு கங்குலும்-இரவும், 57. நாந்தகம்-வாள் 58. துணிப்பட்டு-துணிக்கப்பட்டு

60. மீண்டும் காலையிற் கண்டுள மின்புற விழைந்தே
ஆண்டு வந்தவ ரண்ணலி னவயவ மெல்லாம்
ஈண்டி யோர்குறை யின்றிநன் ருவியோ டிருப்பக்
காண்டலாலவர் தம்மெணம் வீணெனக் கவன்ருர.

61. தீய வச்செயல் செயநினைந் தவர்தமைத் தேர்ந்தே
ஞாய மன்றுநுஞ் செயலெனக் கழறினர் நல்லோர்
மேய வாழ்க்கையும் உடலபி மானமும் விட்ட
தூய வன்றனக் கங்கிதைத் துடுத்தனர் தூய்தே.

திரிசூர் சென்று திரும்பியது

வேறு

62 * மற்றொரு நாளிலையன் மாடுறு திரிசூர் நண்ணி
யுற்றவெம் பசிதணிப்பா னெல்லையி னேகியாதுஞ்
சொற்றிலன் வீதி நிற்பத் துட்டனங் கொருவன் கண்டு
செற்றமில் குணத்தான் றன்னை வினவலுஞ் செப்பா னென்றும்

63 * திகழ்பர ஞான மூர்த்தி யிவனெனத் தெளியா னெஞ்சில்
திகழ்வுறு பித்த னென்றே நினைந்தனன் மூட னந்தோ
நிகரிலாத் தவமேற் கொண்ட நிமலனை வாயின் கண்ணே
புகழறு கொடிய பாவி புண்படச் சுட்டா னென்ப.

64 * ஆவதோர் காலையைய னாற்றினன் விடோபா வென்னத்
தீவினை தீய நோற்ற தேசிகர்க் கன்று தொட்டுப்
பூவுல கதனி லுள்ளோர் புகன்றனர் விடோபா நாமம்
தேவரும் பரவு மற்றைச் சரிதையுஞ் சிறந்த தாமே.

(அ-ரை) 60. தம்மெணம்-தம் எண்ணம், 61. கழறினர்-கடிந்து கூறினர், அங்கி-சட்டை; நிலையங்கி என்பர், தூய்து உடுத்தனர் என்க; அவர் செயல் தூய்து எனவும் ஆம். எ-அசை, 62. மாடு-பக்கம். "மாடு பற்றி இடங்கர் கலித்திட" (கம்பராமாயணம் கிஷ்கிந்தா காண்டம், 138) "மாடளிக்குல நெருங்கு பைந்துளப மாலையாய்" வில்லிபாரதம், உத்தியோகப் பருவம், கிருட்டினன் தூது சருக்கம் (1.6) 64. விடோபா-என்பது பண்டரிபுரத்திலுள்ள திருமாலின் பெயர் அவர்கள் குலத்தார் வழிபடுங் கடவுள்.

65. சுட்டப்புண் ணுறு முன்னர்த் துட்டனு மிறந்தா னென்றே
பட்டனர் வேறோ டன்னுன் பாழ்படு சுற்றத் தோருஞ்
சிட்டனு மென்னை யாண்ட சிவனரு ளிதுவென் றுன்னி
விட்டன னவ்வூர் பின்னர் விளங்கிய போரூர் நண்ணி

66. கனிபடு கிளவியார்தங் கண்வலைப் படாத தூய
னனிமிகு பசியுற் ருலு நாறுமிவ் வுடலிற் ருலு
மினியொரு வீதி செல்லே னிருப்பலிவ் விடத்தி னென்றே
பனிப்புறச் சந்தை யுற்ருன் பட்டினத் தடிகள் போல

67. அகத்தினும் புறத்துத் தானு மருந்துற வுடையோர் பண்டு
மிகப்பல ரிருந்தா ரென்று விளம்புவ கோட்டா மின்றுஞ்
சகத்தியாம் நேரே காணுந் தகவினே முய்ந்தே மென்றே
உகப்புற விருந்தா னிந்த வுத்தமன் செயல்நன் ருமே

68, முரணிய பகையாற் றன்பேர் மொழிந்தவர் தமைய டர்க்கும்
இரணிய ளுக மீர விமையவர் நடுக்கந் தீர
உரநர மடங்க லான ஒருதிரு வடிவத் தோடே
வரமருள் மால்நின் ரேங்கு மலையுள தவ்வூர் மேற்பால்.

69. மாரிபெய் துறலா லந்த மலையின்வீ ழருவி நீத்தம்
ஊரினின் ரேடு நீத்தம் உறுசல தாரை நீரோ
டேரியிற் சென்று பாய்தற் கேற்றவாய்க் காலவ் வூர்க்கண்
சீரிதாஞ் சந்தை மேட்டிற் றிகழ்ந்துறச் செல்லு மன்றே.

(அ-ரை) 66 "இருக்குமிடந் தேடி என்பசிக்கே யன்னம்- உருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன் என்று கூறியபட்டினத் தடிகள் போல் என்க' 67. என்று உகப்புற - என்று உலகோர் மகிழும்படி, 68. முரணிய - வலிய. ஈர-பிளக்க. உரம்நரமடங்கல்-வலிய நரசிங்கம். 69. நீத்தம் - வெள்ளம் சந்தைமேடுஎன்றது இப்போதுள்ள மார்க்கட்டின் மேற்புறமாகும்.

70. சந்தைமேட் டிடைசெல் வாய்க்கா றன்னினு மதனைச் சார்ந்த
நந்தலின் மனையின் திண்ணைக் கண்ணும் நன்மோன முற்றே
எந்தநே ரத்துந் தங்கி யினிதுற வெவருங் காண
அந்தகற் காட்ப டாத வையன்வீற் றிந்தா னந்நாள்.

மழைவெள்ளத்தில் மறைந்திருந்தது

வேறு

71. விண்ணி னிற்படர் வெண்முகில் கருங்கடன் மேவி
யுண்ணி ரம்பவுண் டுறுபொரு ணிறமது காட்டும்
ஒண்ப ளிங்கெனக் கறுத்துமின் னுறவிடித் ததிர்த்து
திண்ணி திற்பெய லுற்றது தாரைகள் செறிந்தே

72. வெள்ள மிக்குவி ரைந்துகான் மேவுற மெய்யும்
உள்ள முந்துணுக் கின்றியாண் டுற்றவன் றன்னைத்
தள்ளி யேயடித் தேகுமென் றெண்ணிய தக்கோர்
எள்ள லில்பெரி யீர்கரை யேறுமி னென்றார்

73. ஆசை வெள்ளநீத் தருங்கரை யேறவுற் றிருந்தோன்
ஓசை வெள்ளநீந் தொழிந்திலன் கரையுற ஞக
மாசை யுற்றவவ் வெள்ளத்தின் மாய்ந்தன னென்றே
பேச லுற்றுளம் நைந்தனர் பெயர்ந்தனர் தேடி

74 மழையும் நின்றது வழியவாய்க் காலுற வந்த
தழையும் வெள்ளமுந் தாழ்வுறக் குறைந்தவ் வேலை
குழையு நெஞ்சினர் குரிசில்தன் னுடலது மண்ணி
னுழைபு தைந்தவன் தலைபுற முறுவது கண்டார்.

(அ.ரை) 70.மனையின் திண்ணைஎன்றதுவேலுமுதலியார்வீட்டுத் தெருத்திண்ணை. அந்தகற்கு ஆட்படாத - யமனுக்குஅகப்படாத 71 முகில் - மேகம். உறுபொருள்நிறம்அதுகாட்டும் - தன்னைச் சார்ந்தபொருளின்வண்ணத்தைக்காட்டுகின்ற. கறுத்து-வெண்முகில் கருங்கடல்நீரினைப்பருகியதால்கருநிறங்கொண்டு. தாரைகள்-மழைத் தாரைகள் 72. கால்மேவுற-வாய்க்கலில்வந்துசேர 73. அருங்கரை அடைதற்கரியமுத்தியாங்கரையை,மாசைஉற்ற-மாசுற்றுக்கலங்கிய தேடி-தேடி. 74. புறம்உறுவது - வெளியேதோன்றுவதை

75. அண்ண னல்லுயி ரகன்றதென் றுன்னியே வன்னூர்
மண்ணை மிக்ககழ்ந் தெடுத்தனர் உடம்பினை வல்லோன்
கண்ணி னைத்திறந் தின்னகை புரிந்தனன் கண்டோர்
உண்ணி றைந்தபே ருவகையும் வியப்புமுற் றனரால்.

76. வித்த கன்செய லெங்கணு மேவுற வெவரும்
அத்த லத்துவந் தடியவ னடிபணிந் தகன்றார்
சுத்த ஞானியுந் துலங்குற வப்பதி வதியும்
அத்தி னங்களி லோர்தின நிகழ்ந்ததை யறைவாம்.

புரோகிதர் அடைந்து வழிபட்டது

வேறு

77. ஓங்கிய மறைக்கு லத்தோ னுயர்மறை முதல வாய
தீங்கறக் கற்றொ ழுக்கிற் சிறந்நவன் புரோகி தஞ்செய்
வேங்கட ராய னென்பான் விழுமிய விடோபா வின்சீர்
பாங்குறக் கேட்டு வந்து பணிந்தவன் பாதம் போற்றி

78. அகத்தினிற் பிரம ஞான மார்ந்தவன் பாலே யன்பு
மிகப்பெறு வோனு டோறும் விழைந்தவ னருகி ருந்தே
தகப்பல பணிகள் செய்தே தகுமுறை யாடி யின்புற்
றுகப்புற வொழுகி வந்தான் உறுதிமற் றிதன்மே லுண்டோ.

79. இனையனிவ் வசறி ருப்ப விவன்றனில் வாழ்வுக் கேற்ற
மனையவள் கருப்ப முற்றி வாய்த்துறும் நாளி லன்னுள்
தனையழைத் தேகி னூரத் தந்தைதாய் தம்ம னைக்கே
அனையனு மறிவன் றன்னை யகன்றில னாயி ருந்தான்

(அரை) 78. ஆர்ந்தவன்-அடைந்தவன். 79. அறிவன்-அடிகள்

80. சிலபகல் செல்ல வோர்நாள் சென்றதன் மனையின் தேக
நலமது காண வேண்டி நம்பியைத் தொழுதில் லாள்பால்
செலவிழை வுற்ற செய்தி செப்பலுஞ் சிறிது நேரம்
சொலலொன் றுமின்றி வாளாத் தூயவ னிருந்த காலே.

81. மீண்டுமப் பனவன் வேண்ட வினையிலான் விழிநீர் வார
நீண்டதன் கைக ளாலந் நினைவினன் றனைய னைத்தே
யீண்டிய துன்புற் றன்போ லேங்கின னாகி விம்மி
ஆண்டுறத் தேம்பித் தேம்பி யழுதல்கண் டறிவ ழிந்தான்

82. பின்புதன் நினைவு தூண்டப் பெற்றவன் சொல்லா னாகி
யன்புடை யவனை விட்டே ஆரணிக் கேக லுற்றான்
துன்புறு பிரச வத்தின் துறந்தனள் ஆவி யில்லாள்
என்பதை யறிந்த ரற்றி யெல்லையில் துயருற் றானால்.

83. சுற்றமார் துயர மோடு தந்துயர் மிகவி யற்கை
தெற்றெனத் தெளிந்து பின்னி செயற்குறு கரும மெல்லாம்
முற்றினன் குறைவின் றாக மூலமாம் பற்றொ ழிந்தான்
பெற்றியை யாய்ந்து ணர்ந்து பேறுற மீண்டுஞ் சார்ந்தான்.

84. சார்ந்தனன் சார்வி லானைத் தகப்பணிந் தொழுகு நாளில்
ஆர்ந்தவில் லறத்தின் வாழ்விற் கமையநன் மங்கை தன்னைத்
தேர்ந்துயர்ந் தோர்கள் போற்றத் திருமணஞ் செய்து மனபு
தீர்ந்திலன் தேசி கனையாற் றினம்பணிந் தொழுகி னானால்.

(அ-ரை) 80. விழைவுற்ற-விரும்பிய 81. பனவன்-அந்தணராகிய புரோகிதர். ஆண்டு-அவ்விடத்து 82. இல்லாள்-மனைவி. 83. மூலமாம் பற்று-பிறவிக்குக்காரணமான இருவகைப்பற்றுக்களையும். பேறு-வீடு பெறுதற்குரிய ஞானம். 84. சார்வு இலானை-சுற்றத்தார் முதலிய சார்வு இல்லாதவனை.

சர்க்கஸ் கம்பெனித் தலைவன் சந்தித்தது

வேறு

85 ஆனு வளமுற் றமையவுறு
மணிசெய் போஞர் நகர்தன்னில்
நானு விநோத வித்தைகளை
நயக்கக் காட்டும் வினைஞருளும்
பூனு நகர்மல் லகவித்தை
பொருந்தக் காட்டுந் தொழிலுடையார்
மேனுள் வந்தவ் விடத்தருகில்
வியன்கூ டாரம் மேவுவித்தே

86 மெய்யின் வலியாற் பயில்வித்தை
விளேவும் அரிமா கரிமற்றும்
செய்ய வரிய செயல்யாவும்
தெரியக் காட்டுந் திறஞ்சான்று
மொய்கொள் குழாத்தோ ரல்லின்கண்
முறையாற் றத்தந் திறமெல்லாஞ்
செய்து காட்டினர் தினமும்
தேயத்தோர்கள் மெச்சிடவே

87. அந்தக் குழுவி னருந்தலைவ
ஞயன் குலத்தில் வந்தவனும்
உந்து மன்பி ஞலவனை
யுற்றுக் கண்டே யுரையாடித்
எந்தி றத்தைக் காண்பதற்கின்
றினியோய் வருக வெனவேண்டப்
பந்த மகன்றேன் காண்கின்ற
பரிசு வேண்டே னென்றுரைத்தான்

---

85. மல்லகவிதை - சர்க்கஸ் 86 அரிமா - சிங்கம், கரி - யானை. மற்றும் - புலிமுதலியஏனையவிலங்குகள். அல்லின் கண் - இரவில். 87 உந்தும்-உள்ளத்திலிருந்துஎழுகின்ற.

88. என்று கூறி மறுத்தானை
யெந்த விதத்தும் கொடுபோவேன்
இன்றிப் பெரியோன் றனையெய்ந்றே
எண்ணிப் புதிய வங்கிகொடு
தென்றற் றேரோன் றனை நுதற்கட்
றீயா லெரித்த சிவன்றன்னை
ஒன்றி யிருந்து நினைக்கின்ற
யுத்த மற்கே யுடுத்ததற்பின்

89. சுரும்பு மூசாத் தூமலராற்
றொடுத்த மாலை கொண்டுவகை
யரும்பு முளத்தோ டணிதோண்மேல்
அகல மேலு மழகுறவே
திரும்பப் பிறவா நெறியானைச்
சிறக்கப் புனைந்து சேவடிகள்
வருந்த நிலத்திலுருவகை யூர்
வலஞ் செய்விக்கும் வேட்கையினுல்.

90. இரண்டு பிறைதன் வாய்நுழைவ
தேய்க்கும் காரி னிநுங்கோட்டுத்
திரண்ட பனைக்கை யானையின்மேல்
செம்மல் ஏறத் தன்குறிப்பால்
முரண்டங் காதே தாழ்கென்ன
மூரிக் களிறு மண்டியிட்டே
சரண்ப ணிந்து தாழ்ந்துறவே
தக்கோ னேறப் புக்கிலனே.

---

88. அங்கி-சட்டை, தென்றல் தேரோன்-மன்மதன், உத்தமற்கு-விடோபாவிற்கு. 89. சுரும்பு-வண்டு, மூசா-மொய்க்காத. அகலம்-மார்பு, வேட்கையினுல்-விருப்பத்தினுல் 90. பனைக்கை-பனைமரம் போன்றதுதிக்கை ஏறப்புக்கிலன்-யானையின்மேல் ஏறச்சென்றுனில்லை

91\. மதமார் களிற்றை யடக்கலரி
மாவின் முதுகின் மேற்கொள்ளல்
இதமில் கரடி புலிதம்மை
யேவல் கோடல் முதலாய
பதம தறிந்தா னப்போதே
படியில் சிந்தை தனையடக்கும்
விதமு முணர்ந்தான் தனைத்தூக்கி
விரைந்து செல்லத் துணிந்தனனே.

92\. கல்லைப் பிளந்து காட்டவல்ல
கையா லசைவி லாதவனை
புல்ல னென்றே யிலேசாகப்
புக்குத் தூக்கப் போதத்தால்
வல்லன் றன்னை யசைக்ககில்லான்
மற்றும் பரா மாயுறவே
மெல்ல வலியாற் பெயர்த்து மென
மேவா னுகி யோவாதே.

93\. புக்கு மற்போர் பயில்வானும்
புயத்தின் வலியால் மூச்சடக்கி
முக்கித் தூக்க முயன்றனனுன்
முடியா மன்மூச் சுத்திணறன்
மிக்குற் றுச்சோர் வெய்தித்தன்
மேவு மல்லார் தோளினைத்
தொக்குத் தூக்கு மின்னென்று
சொல்லு முன்னந் தொக்கனரால்.

(அ-ரை) 91. கந்துகமதக்களிற்றை என்னும் பாட்டிற் காண்க (தாயுமானவர் பாடல் தேசோ மயானந்தம் 8.) 92. அசைக்கில்லான்-அசைக்கவன்மையில்லாதவனுய். ஓவாது-நீங்காது. ஏ-அசை 93. பயில்வான் - பயின்று வருபவன். மல்லார்தோள் - மல்யுத்தம் செய்யும் வலி நிறைந்ததோள். தொக்கு-சேர்ந்து.

94. மெய்யாற் றூக்க மில்லானை
வீமன் போன்றூர் மெய்வலியால்
எய்யா தடுத்துத் தூக்கலுற்று
ரிம்மி யளவும் புடைபெயரான்
மொய்யார் வலியெல் லாங்கொண்டே
முனகித் தூக்க முடியாமல்
செய்யா றற்று நெஞ்சொடிந்திச்
செயல்நம் மால்ஆ காதென்றே.

95. தங்கள் தலைவன் பாலிந்தச்
சாமி யெளிய சாமியன்று
துங்க வன்கா ரிரும்பிற் செய்
துணையில் சாமி யாமிவரை
எங்க ளால்தூக் குதற்கியலா
தென்றே யுரைத்து மீண்டனரால்
புங்க வன்றன் செயல்வியந்து
போற்றியவனும் போயினனே

96. அன்று முதல்வி னோதமுறு
மாட்டத் தொழிலில் வருவாய்மிக்
கொன்ற வுவந்தே யுயர்ஞான
வுத்தமன் றன் வீற்றிருக்கப்
பொன்ற லில்லா வளம்பெருகும்
பொருளூ ரென்னு மந்நகரில்
நன்று மண்ட பங்கட்ட
நயந்து பொருளை நல்குதற்கே.

(அ-ரை) 94. மெய்யால் தூக்கம் இல்லானை - மெய்ப்பொருளை அறிதற்கண் உறக்கமில்லாது விழிப்பாயுள்ள விடோபாவடிகளை உருபுமயக்கம். புடைபெயரான் - அசையாதவனுனுன். செய் ஆறு அற்று-இனிச்செய்யும் செயல் வேறு இன்றி. 95 துங்க-உயர்ந்த. 96. பொன்றல்-அழிவு

97. வந்துவி டோபா பதமலரை
மணப்பூ மாலை சூட்டிமகிழ்ந்
திந்த வரதற் காசிரம
மியற்றற் கென்று நூற்றிருபத்
தைந்து வெண்பொற் காசுகளை
யருங்காட் டிலாகாத் தலைவனெனும்
நந்தில் தன்சிங் கென்பான்பால்
நல்கி யகன்றான் நவையகன்றான்

98. ஆற்றுந் தரும சிந்தை யன்அப்
பாவு செட்டி முதலானோர்
ஏற்றுப் பிறரீ யும்பொருளோ
டிட்டி நாற்கால் மண்டபமும்
தோற்று வித்துப் பின்புபல
தூய பணிகள் பலபுரிந்தார்
வீற்று மிருப்பான் சிலவமயம்
வியன் மண் டபத்தவ் வித்தகனே

வேறு

99. படிமிசை யெவரும் போற்றப் பன்னருந் துறவு பூண்ட
வடிகளைப் பொருளு ளுள்ளா ரனுகினர் பெரியோ ரென்று
அடிமிசை வீழ்வ ருற்ற தறைகுவர் திரிவர் பின்னே
கடிமலர் தூவி யெங்கள் வினையறக் கண்பா ரென்பார்.

100. என்றவர் வணங்க வொன்று மிசைத்திலன் மவுனி யாகித்
தன்னுளே பெருகு மின்பந் தன்னையே நோக்கி நோக்கி
என்றுமே யுற்றோ னாகி யெவ்வுல கத்து மிச்சை
துன்றுத லொழிந்து நின்றான் சுகப்பிர மத்தைப் போல.

(அ—ரை) 97 வரதற்கு - மேன்மையாகிய அடிகளுக்கு வெண் பொன்காசுகள் – வெள்ளியாலியன்ற ரூபாக்கள் காட்டு இலாகாத் தலைவன் (Forest ranger) நந்து இல் - கெடுங்குணமில்லாத நவை-குற்றம் அகன்றான் என்பது தெளிவுபற்றி இறந்தகாலத்தாற் கூறப் பட்டது. (தொல்காப்பியம் சொல்லதிகாரச் சூத்திரம் 99.) 99 என்று-என்று. 100 தன்னுள்ளே பெருகும் இன்பம்-தனது உள்ளத்துள்ளேமிகு கின்ற ஞான ஒளியாகிய இன்பத்தை. நோக்கி-அகக்கண்ணால் நோக்கி நோக்கி நோக்கி-அடுக்கு. சுகப்பிரமம்—வியாசமுனிவர்மகனரான பிரம ஞானமுற்ற சுக முனிவர்

சிறுமியொருத்தியின் சுரநோய் தீர்த்தது

வேறு

101 அப்பதியி லொருமறுகி னகலாத சுரநோயால்
வெப்புறுமோர் சிறுமியுண வெறுத்துடல மிகமெலிந்தே
செப்புமருத் துவமுதலாற் றீராமல் பேச்சுமற்றுத்
தப்பரிதா லுயிரென்னுந் தருவாயி லுறவோர்கள்.

102 தாமவளைக் கொண்டணைந்தார் தனித்துறவி நாளிலிட்டு
நாமமுறு வெங்கொடுநோய் தனிநீங்கி யிவளுய்ந்து
சேமமுறக் கடைக்கணிப்பீர் தேவரீர் என்றுரைத்துத்
தோமிலவன் றனைவேண்டித் துதித்துநெடி துற்றனரே.

103 பகரரிய சிவஞானி பகர்ந்திலனெனை றும்பகலும்
இகவிரவு தானுறவே யாங்காலை யுறுதுமென
மகளையெடுத் திலமணைந்தார் மறுநாட்காலையில்மீண்டும்
புகநினைந்தே எடுத்தங்குப் போந்தனர்மெய் போதனுழை

104 மெய்யவன்றன் ருட்கிடத்தி மிகவேங்கி நின்றனரால்
வெய்யசின முற்றான்போல் வெஞ்சுரத்தில் நைவாளை
உய்யநினைந் தேகாலா லுதைத்திட வகுற்றோரும்
நையலுறீர் நலமுற்றீர் தன்றெடுத்தே குமினென்றார்

105 அவ்வணமே எடுத்தேக வன்றுமறு நாட்காலை
வெவ்வியநோய் விரைந்தொழிந்து மேவுமனை
முன்றிலுற்றே
செவ்வியுறுஞ் சிறுவரொடும் சேர்ந்துவிளை யாடலுற்றாள்
இவ்வியனன் கறிந்தோர்கண் டினிதிருந்தா ரவ்வேலை

(அரை) 101 சுரநோய்-காய்ச்சல் உணு-உணவு உயிர்தப்பு அரிது-உயிர்நீங்குதல் தவிராது உறவோர்கள்-தாய்தந்தைமுதலிய சுற்றத்தார்கள் 102 நாமம் + உறு. தோமஇல் அவன - குற்றமில்லாத அடிகளை நெடிதுஉற்றனர்-நெடுநேரம்காத்திருந்தனர் 103 இக-கழிய உறுதும்-வருவோம் மெய்ப்போதன-மெய்ஞ்ஞான முடையவன் 104 நைவாளை-வருந்துஞ்சிறுமியை ஏகுமின்-செல்லுங்கள் 105 மனை முன்றில்-மனைவாயில். அவ்வேலை- அச்சமயம்

வயிற்றுவலி முதலியவை தீர்த்தது

106. வருந்துறச் கொலுமொரு வயிற்று நோயினால்
அருந்துயர் கொண்டவர் ஆற்ற வல்லதல்
மருந்துண வும்பயன் வாய்ந்தி லாததால்
அருந்தவன் தன்னைவந் தணுகி னாரரோ.

107. கூற்றுதைத் தவனடி குறிக்கொ ணெஞ்சினன்
கூற்றறிந் தவன்பதங் குறுகி யெம்வினைக்
கூற்றுறு மிவ்வலிக் கொடுமை தீரெனுங்
கூற்றறிந் தனனவர் குறையை யெண்ணுவான்.

108 சொல்லியுள் வருந்துவோர் தொல்லை யொழிவுறக்
கொல்லிய வரும்வலிச் கூற்றுவதைத் தெதொன
ரெல்லையன் னார்வயிற் றுறைதத்த னனபிணி
புல்லென வொழிந்ததாப் புகன்று போயினார்.

109. மற்றவெம் பிணிகளால் வருந்து வாருமப்
பற்றிலான் றன்பதம் பற்றி வணங்கியே
அற்றனர் பிணியெலா மருப்புன் மேற்பனி
உற்றவெங் கதிர்முன மொழிந்த தென்னவே.

வேறு

110 இப்பெருங் குரவன் மாண்பு மிருக்குதன் னிலையு மோரசு
வப்புறு கடற்பா ருள்ளா ரணுகினர் வணங்கி யேத்தி
யொப்பரு கனிக ளோடு மூட்டின ரமுத மையன்
செப்பிய முறையி னுண்டு செயலறச் சிவமாய் நின்றான்.

---

107. கூற்று உதைத்தவன் - சிவபெருமான், கூற்று - யமன். குறிக்கொள் - தியானம் செய்கின்ற. கூற்று அறிந்து - திறத்தை அறிந்து. வினை கூற்று உறும்-வினையின் பாகுபாட்டினால் வந்த கூற்று-சொல்லை 108, கொல்லிய-கொல்லும் பொருட்டு வலிக்கூற்று உருவகம். புல்லென-வறிதாக. 110. அப்பு-நீர்.

111 சொன்னவிப் பரிசே நாளுஞ் சோர்விலா துற்ற காலத்
தின்னநற் பெரியோ னெஞ்ச மியாவதென்று றுணர்வான் மாந்தர்
பொன்னையு மற்று முள்ள பொருளையு மீவார் வாங்கி
யன்னவர் முன்பே சொன்ன வவைமுழு தெறிவான் மண்ணில்.

112 ஈங்கிவ னிருந்த செய்கை யறிந்தன னிவனை யீன்றோன்
ருங்கரு முவகை யோடுந் தனையனைக் கண்டு பண்டு
பூங்கழற் புனித நின்னைப் பொலிவுறப் பயந்த பேறு
தீங்கறப் பெற்றே னென்ன செம்மல்சீர் சொல்லிப் போனான்.

113 ஆலமா ரவிச்சை வென்ற வறிவினர் தம்மை யோரிற்
பாலருன்மத்த ரோடு பகர்தரு பசாச ரென்ன
நாலுணர் புலவர் சொல்வர் நுவலுமத் தன்மை யாவுஞ்
சீலமா ரன்னான் மாட்டுத் திகழ்ந்தன வதனா லவ்வூர்

114 வாய்மைசால் புனித ரியாரும் வள்ளலைக் காலந் தோறுந்
தாயென விரும்பிக் கண்டு தக்கநற் பணிக ளாற்றி
மாய்விலாப் பவப்பி ணிக்கு மருந்திவ னென்று கொண்டு
தூய்மைகொ ளவன்ற னுமைந்து திப்பவ ரானார் பின்னும்.

115 தேசிகற் கென்று கொண்ட திருவடிப் பூசையென்னு
மாசறு தொண்டை யோரோ ராண்டினும் வழுவு றுது
பேசிய முறையி னேடும் பெருகிய வன்பி னேடுங்
கூசிடா தியற்றி யன்னான் குரைகழற் பணிந்து வந்தார்.

(அ-ரை) 112. ஈன்றோன் - தந்தை, தனையனை - மைந்தனை, பூங்கழல்-அழகிய திருவடி. பொலிவுஉற - விளக்கமுற, பயந்த-பெற்ற 113. ஆலம்ஆர் - விடத்தன்மைநிறைந்த, அவிச்சை - அஞ்ஞானம், உன்மத்தர்-பைத்தியக்காரர். பசாசர்-பிசாசுபிடித்தவர். 114, மாய்வு இலா-ஒழியாத. 115 திருவடிப்பூசை - அடிகளைவீற்றிருக்கச்செய்து திருமஞ்சனமாட்டிவழிபடுதல்

116. மண்ணிடைப் பிறந்தோர் யார்க்கு மாசறு குரவன் பாத
மெண்ணுத லொன்றே யெல்லா வறத்தினு மினிதா மென்றும்
விண்ணுறு மேலாஞ் செல்வ வீட்டினை யளிப்ப தென்றும்
புண்ணிய மேலோர் முன்னர்ப் புகன்றனர் மெய்மை யன்றோ.

117. பின்னுமப் பெரியோன் பாதப் போதினைப் பணிவான் வந்த
நன்மைகொண் மனத்த ராகி நவையறு மன்பர் தம்மைச்
சொன்னதோர் முறையி னுண்டி துய்ப்பித்தவ் வரிய மேலோர்
துன்னியெந் நாளும் வைகத் தூயதோர் மடமுங் கண்டார்.

118. இன்னவா மடத்தின் பாங்க ரிருந்தன னெங்க ளுதன்
அன்னதோர் காலை வந்தவ் வருந்தவ னடியில் வீழ்ந்து
மன்னினுர் தம்மை யுற்ற மடிவறு நோய்கண் மீண்டுந்
துன்னிடா வண்ண முன்னித் தூயநோக் களித்தி ருந்தான்.

119. ஈதிவ ணிற்கப் பின்னு மிறைவடி வாஞ னங்கண்
டீதறச் செய்த லீலை செப்புகற் கியாவர் வல்ல
ரோதிடு மகிமை யாக வொழிந்தன விருப தாண்டு
கோதறு குரவ னென்றுங் குறித்திடாக் குறியி னின்றான்.

அடிகள் விதேகமுத்தி அடைந்தது

120. அறுபதின் னுண்டுட் சாதா ரணமென வறையு மாண்டின்
மறுவறு துலாமென் றோது மதியிலா திரையாம் நாளிற்
சிறுமைதீர் விதேக முத்தி சீர்பெற வடைந்தெஞ் ஞான்றும்
பிறிவறு நிலைய னுன் பேசொணுப் பிரம மூர்த்தி.

(அ-ரை) 116. மேலாம் செல்வவீடு-முத்தி 117. துய்ப்பித்து -உண்பித்து வைக - தங்குதற்கு கண்டார் – நிருமாணம் செய்தனர் 118. வீழ்ந்து மன்னினுர் தம்மை வீழ்ந்து வணங்கினவர்களை ஈ ... டு. கூறும் மடம் சுவாமிகளின் ஆலயத்திற்கு வடபுறத்திலுள்ளது 120. துலாமதி-ஐப்பசி மாதம் ஆதிரை-திருவாதிரை.

121 சாற்றுறு சகாத்தஞ் சாலி வாகன மாயி ரத்தெண்
ணூற்றுமுப் பத்து மூன்று நுவலுசா தார ணத்திற்
றேற்றுமைப் பசியில் ஏழாந் திகதியா தித்த வாரம்
ஏற்றுறும் அமர பக்கம் இயை திதி ஆறு மன்னே.

122 ஆயவத் திதியி னோடே யாய்திரு வாதி ரைக்கண்
தூயதன் மையு ணர்ந்து துரிசெலா மகற்றி னோர்க்குஞ்
சீயமாம் பிரம ஞான தேசிகன் விடோபா நாமம்
மேயவன் விதேக முத்தி மேவினன் உலகம் போற்ற

123 தன்னொரு தலத்திற் போளூர் தங்கும் அப்பாவு செட்டி
மின்னகு கழலான் மேவ விதிமுறை கோயி லாக்கத்
தொன்மையின் மேலோ னின்றுஞ் சொல்லுமான் மியங்க ளாக்கி
மன்னின னிறைவனாக வெஃபதிம் மறுவில் காதை

124 பகருமப் பெரியோன் மீதப் பதியுளார்க் குற்ற வன்பு
நிகரிலாப் பரமன் மீது நின்றில தென்ன வையன்
செகமுளா ருள்ளம் வேட்ட திறமெலா மின்று மீயுந்
தகவுளா னாகி நின்றான் றற்பர மூர்த்தி யானோன்.

திருமடத் திருப்பணி செய்தது

வேறு

125. தற்பர ஞான மூர்த்திமா மடத்திற்
தலைவனும் திருவரு ளணக்கண்
வெற்பெனும் பவளக் குன்றுமா மடத்தின்
விழுமிய தலைமைசார்ந் தவனும்
விற்பனன் வேலா யுதனெனும் பெரியோன்
மேன்மைசார் வேதநன் ஞானம்
பொற்புறக் கற்ற புண்ணிய னென் போன்
புரிந்தனற் பணிகணன் றென்ப.

(அ-ரை) 121. திகதி-தேதி ஆதித்தவாரம்-ஞாயிற்றுக் கிழமை திதிஆறு - சஷ்டி. 122. சீயம்-சிங்கம். 124.ஈயுந்தகவுளான்ஆகி அன்பர்க்கு அருளுந்திறத்தினனாகி. 125. வெற்பு - மலை 'நன்று-பெரிது.

126. நித்திய பூசை யோடுநை வேத்யம்
நெறிமுறை வழாதுறச் செய்தும்
அத்தன்சற் குருவிற் கானபூ சனையும்
ஆண்டுதோ றுஞற்றிடச் செய்தும்
வித்தகன் மடத்திற் கெதிருறத் தூய
வியன் மடப் பள்ளி யொன் றமைத்தும்
தத்துவ ஞான சாத்திரம் பிறர்க்குந்
தகவறிந் துணர்த்தியும் வந்தான்.

127. பவமறற் கான பணிகளிவ் வாறு
பல்பகல் கழிந்துற வவனும்
தவமுறு பவளக் குன்றுமா மடத்தைச்
சார்ந்துற வெண்ணினன் மீண்டும்
சிவமுறு புவன கிரிவரும் புனிதன்
செவ்விதின் ஞானசாத் திரங்கள்
எவமறக் கற்றேன் இனிய நல் லொழுக்க
மேய்ந்துல காசையை யிகந்தோன்

128. துறந்தவர் போற்றுஞ் சுகன் துரைசாமித்
துறவியாம் சாதுவின் பால்தன்
அறந்தரு மடத்துத் தலைமைநற் பணியை
அளித்தன னகன்றன னேக
மறந்தவி ருளத்த னப்பெரறுப் பதனை
மாண்புற வேற்றுநற் பணிகள்
திறப்பெற வகுத்துச் செய்தனன் முன்னின்
சிறப்புறப் பின்னுமப் பெரியோன்.

(அ-ரை) 126. நெறிமுறை-ஆகமமுறையில். உஞற்றிட-நடைபெறும்படி 127. எவம்-குற்றம் எவ்வம் என்றதன் தொகுத்தல் விகாரம 128. அகன்றனன் ஏக-நீங்கினவராகிச் செல்ல மறம் தவிர் - தீமையினின்று நீங்கிய.

129. திருமடைப் பள்ளி சிறப்புறச் செய்தும்
திகழ்சபா மண்டப மமைத்துங்
கருவெனு மூலா காத்தினைச் சுற்றிக்
காண்புறு மண்டபம் பிறவும்
பொருவறப் புரிந்தும் புலவர்கள் பலரைப்
புகல்குரு பூசைசேர் நாளும்
மருவுநல் விசேட நாளினு மழைத்து
மகிழ்விரி வுரைசொல வைத்தும்

130. மற்றுநற் பணிகள் வாய்ந்துற வின்றும்
வையக மகிழ்ந்தினி துறநற்
பெற்றியிற் புரிந்தும் வருபவம் நீக்கப்
பெற்றவ னுயின னின்றும்
வெற்றியின் மிக்க சீர்விடோ பாவின்
வியன்மடா லயப்பணியோங்கப்
பற்பல காலம் வாழ்கவென் றுயர்ந்தோர்
பத்தியின் இவனைவாழ்த் துவரே.

வேறு

131. சீர்கெழு முனிவர் கதை சிறப்புறச் சொன்ன
பாரினிற் பல்லோருற்ற பயன்பெரு நின்ருரிந்த
வேரியற் பரமற் குற்ற சரிதையை யெனக்களித்த
தார்கெழு முருகன் தாட்கீழ்த் தாழ்தும் கடமை யேனே.

வாழ்த்து

132. ஆதியெம் பரமன் வாழி யவனருள் வலியா லிந்த
மேதினி மயக்க றுத்து மெய்ப்பொருள் வடிவாய் நின்ற
கோகறு விடோபா வாழி குவலயத் தடியார் வாழி
பூதியொ டைந்தெ ழுத்தும் பொருவில்கண் டிகையும் வாழி

133. வாழ்க மன்விடோ பாவின் கீர்த்திகள்
வாழ்க மாமடம் நல்லற மாதவர்
வாழ்க மாநில மல்குவ ளம்பெற
வாழ்க நல்லர சும்மிக மாணவே.

வித்துவான் மா. அ. குப்புசாமி பிள்ளை இயற்றிய.

ஸ்ரீ விடோபாசுவாமிகள் சரித்திரம் மூலம் முற்றிற்று.

(அ-ரை) 29. மூலாகரத்தினை – திருமூலத்தானத்தை. பொருவு அற-ஒப்புமை இல்லாது. 131. ஏர் இயல்–அழகும் இலக்கணமு மமைந்த. ஏரியல் சரிதை என்க. 132. பூதி-திருநீறு. கண்டிகை-உருத்திராக்கம் 133. மாண-மாட்சிமைமிக.